# சொல்லேருழவர்



"தமிழ் மணி"

# தெல்லியூர். செ. நடராசா


## நினைவு மலர்

2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒண்முத்தி சித்தியே.

-திருமூலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# தெல்லியூர் செல்லையா நடராசா



தோற்றம்
**14.11.1923**

மறைவு
**19.09.2002**

## திதிப்பா

*சீர்தரு சித்திரபானுசேர் ஆவணி யமாவாசை*
*தொடர்வரு திரயோதசி தேவர் குருவாரமது*
*தில்லை நடராஜன் தாள்நாடி "தமிழ்மணி"*
*தெல்லியூரர் வைதுறந்த நாள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லேருழவர்



தமிழ் மணி

## தெல்லியூர். செ. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

**தோற்றம்:**

இலங்கையின் சிரசென விளங்கும் யாழ்ப்பாண மாகாணத்திலே தொல்பெரும் பதியான தெல்லிப்பழையில் சைவ மரபினனான திருவாளர் நமசிவாயம் செல்லையாவிற்கும், திருமதி மாரிமுத்து செல்லையாவிற்கும் பிறந்த அறுவரில், மூன்றாவது மைந்தனாகப் பிறந்தார். இவரது தந்தையாரை "சிவப்புக் கடுக்கன் செல்லையா" என்று குறிப்பிட்டால் தெல்லிப்பழையில் தெரியாதவர்கள் யாரும் இருந்ததில்லை. அந்தளவிற்கு அந்நாளிலே கப்பல்மூலம் இறக்குமதி செய்து வணிகம் செய்த வணிகர் அவர். புகழ்பெற்ற புண்ணியர் அம்பலவாணச் செட்டியாரின் பீட்டனார் செல்லையாவின் அருமை மைந்தனாய் நடராசா 1923ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆந் திகதி உதித்தார்.

**உடன் பிறந்தோர்:**

இவரது உடன் பிறப்புக்களில் முதல்வரான திரு நமசிவாயம், கல்வி கற்று பொலிஸ் துறையில் மதிப்புடன் உத்தியோகமாற்றி இளவாலைசேர் ஸ்ரீமதி என்பவரைத் திருமணம் செய்து இளவாலையில் வசித்து வருகின்றார். இரண்டாவதாகப் பிறந்த அக்காவான திருமதி சிவக்கொழுந்து சீமெந்துக் கூட்டுத் தாபனத்தில் தொழில் புரிந்த பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த திரு.முத்தையாபிள்ளை என்பாரைத் துணையாகக் கொண்டார். இவரிற்கு அடுத்து நான்காவதாகப் பிறந்த தங்கையான திருமதி சிவபாக்கியம் கொழும்பு கப்பல்துறை அதிகார சபையில் தொழில் புரிந்த புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு கிருஸ்ணப்பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவரது அடுத்த சகோதரியான திருமதி சரஸ்வதி வெலிமடையில் வர்த்தகம் செய்த பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த திரு.மயில்வாகனம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவரது இளைய தங்கையான திருமதி நகுலாம்பிகை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய உசனைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவ்வகையில் இவருக்கு ஏழு பெறாமக்களும் இருபத்தாறு மருமக்களும் உள்ளனர்.

**மாணவப் பருவம்:**

இவர் தனது ஆரம்பக் கல்வியை மகாஜனாக் கல்லூரியில் தொடங்கிப் பின் யூனியன் கல்லூரியில் தொடர்ந்தார். இவரது மாணவ பருவத்தில் ஒரு சிறந்த மாணவனாக திகழ்ந்தார். இவரது பாடசாலை நாட்களில் பாடசாலையில் இயலக் கூடிய அனைத்து நிகழ்ச்சிகளிலும் தன்பங்கு இருக்கவேண்டும் என்பதில் ஆர்வமாயிருந்தார். சிரேஷ்ட ஆங்கிலத் தராதரப் பரீட்சை (special stream) இல் திறமைச் சித்தியடைந்தார். இவ்வாறே விளையாட்டுப் போட்டிகளிலும் தீரத்துடன் பங்குபற்றி பலமுறை சம்பியனாக வந்துள்ளார். இவர் சம்பியனான ஒருபோது அவரது சகோதரி சரஸ்வதியும் யூனியர் சாம்பியன் ஆகிய பெருமை இவர் குடும்பத்திற்கு உண்டு. அதை எண்ணும்போதெல்லாம் பூரிப்படைவார். பாடசாலை விட்டுவிலகிய பின்னும் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தார். பாடசாலை நிகழ்ச்சிப் படங்கள், பாடசாலை மலர்கள் எல்லாம் நினைவுச் சின்னங்களாகப் பேணிக் காத்திருந்தார்.

**எழுத்துலக வாழ்க்கையும், தொழிலும்:**

1933ம் ஆண்டில் இவரிற்கு ஆசிரியர் பண்டிதர் இளமுருகனர் தமிழ் மொழி கற்பித்த போது எழுந்த "எழுத்தின் வலிமை இத்துணையா?" என்ற வியப்பும் தனது தாயாரது விருப்பமும் இவரை எழுத்துலக வாழ்கையை தொடக்கி வைத்தது. இவர் தனது பதினெட்டாவது வயதில் கணக்காய்வுத் திணைக்களத்தில் தனது தொழிலை ஆரம்பித்தார். பின்னர் தனையன் எழுத்துலகில் சேவையாற்ற வேண்டும் என்ற தாயாரின் விருப்பத்திற்கிணங்க உயர்-பதவி உத்தியோகத்தை விட்டு வீரகேசரியில் (1943இல்) திரு வாசு அவர்களின் தலைமையில் துணை ஆசிரியராக கடமையாற்றத் தொடங்கினார். பின்னர் சுதந்திரன் தினசரியாக வந்தகாலத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிப் பின் வாரமலராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவர விலகினார். இந்து சாதனம் (1947) பத்திரிகை ஆசிரியர் குழுவிலும் தொண்டாற்றினார். இவரது தாயாரின் மறைவின் (04-09-1947) பின்னர் இவரின் தந்தையின் விருப்பப்படி மீண்டும் அரச சேவையில் 1950இல் மொழி பெயர்ப்பாளராக சேர்ந்து கொண்டார். முதலில் உணவுத் திணைக்களத்திலும், பின்னர் மீன்பிடித் திணைக்களத்திலும் தொடர்ந்து துறைமுக அதிகாரசபையிலும், விவசாயத் திணைக்களத்திலும் பணிபுரிந்தார். அரச சேவையில் இருந்துகொண்டும் தனது சொந்தப் பத்திரிகைகளான "யாழ்பாடி", "ஜோதிடம்" போன்ற வார/மாதப் பத்திரிகைகளையும் "தமிழ்மணம்", "இளைஞன்" அநுபந்த இணைப்புக்களையும் மனைவி மக்கள் அயரா உழைப்புடன் வெளியிட்டுள்ளார். சமயம், சோதிடம், மொழி, சமூகம், நாடு என்று பரந்துபட்டு சிந்தனை ஆழமுடைய பல கவிதைகள், கட்டுரைகளை எழுதியுள்ளார். பத்திரிகைத் துறையிலிருக்கும் போது ஒரே நாளில் பல புனைபெயர்களில் எழுத வேண்டி இருந்ததனால் கிட்டத்தட்ட 57 புனை பெயர்களில் இவர் எழுதியுள்ளார். 1961களில் "அரச ஊழியர் சிங்களம் படிக்க வேண்டும்" என்ற மொழிச் சட்டத்தை எதிர்த்து ஓய்வு பெற்ற வர்களில் இவரும் ஒருவராவார். ஓய்வு பெற்றபின் பொழுது போக்காக கற்ற ஜோதிடத்தில் கவனம் செலுத்தினார். யாழ் மாநகர சபையினால் நல்லூர் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரின் பதிப்பாசியராகத் தொண்டாற்றி யமையும் குறிப்பிட வேண்டும்.

## திருமணமும் வாழ்வும்

கந்தர்மடத்தைத் சேர்ந்த தம்பையா, மாரிமுத்து தம்பதிகளின் மகளான கனகம்மாவை திருமணம் செய்து இரு பிள்ளைகளைப் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வந்தார். தனது பிள்ளைகள் கல்வியிற் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார். இவரது மூத்த புதல்வனாகிய கனகவேல்ராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாகி கொழும்பு, கல்கிசை புனித தோமஸ் கல்லூரியில், ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் தந்தையின் விருப்பிற்கிணங்க வேறு இடங்களுக்கு செல்ல விரும்பாமல் யாழ்ப்பாணத்திலேயே தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது யாழ் தொழில்நுட்பக்கல்லூரியில் வருகை விரிவுரை யாளராகக் கடமையாற்றுகின்றார். இவரது இரண்டாவது பிள்ளை யான இராஜசிவசக்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியாவார். பின்னர் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் கணனி விஞ்ஞான முதுநிலைப் பட்டதாரியாகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணனிப் பிரிவில் முதலாந்தர முறைமைப பகுப்பாய்வாளராக கடமை யாற்றுகின்றார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத் துறையில் முதுநிலை விரிவுரையாளராகவும் தலைவராகவும் கடமையாற்றும் உடுவில் கிழக்கைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியரின் புத்திரன் கலாநிதி மகேசன் என்பவரை திருமணம் செய்து வித்தகன், சங்கவி என இரு பேரப்பிள்ளைகளைத் தந்துள்ளார். பேரப்பிள்ளைகளின் விளையாட்டுத் தோழனாக இவர் இருந்தார். இவரிடம் எப்போதும் உள்ள இனிப்புப் பண்டங்கள் கற்கண்டு பெற, "அப்பு", "ஆச்சி" என்றழைத் தாரத்தழுவும் அவர் அணைப்பைத் தேடிப் பேரனும் பேர்த்தியும் அவரை நாடிய வண்ணமே இருப்பர். இவரும் இவர்தம் மனையாளும் தமது மருமக்களாகிய இராஜமனோகரன் (Unior staff officier, Commercial Bank) இராஜமோகன் (Assistant production manager, Canada) ஆகியோரையும் தம் பிள்ளைகள் போலவே சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர்.

**வாழ்வின் இறுதியில் :**

இவர் தனது வாழ்க்கையில் எழுத்துலக வாழ்க்கையைத் தான் பெரிதும் எண்ணியிருப்பார். இறுதி நான்கு கிழமைகளுக்கு முன்னர் கண் சிகிச்சை பெற்ற பின்னர் இனி நான் எழுதத் தொடங்கலாம் என்று பல ஆக்கங்களுக்கு வடிவமைத்து வைத்துள்ளார். நீண்ட காலமாக இருதய நோய் இருந்தும் கூட தனது ஒழுங்கான கவனிப்பினால் நோயினால் தாக்கம் பெறாது, தனது வேலைகளைச் செய்து கொண்டு வந்திருக்கின்றார். இவர் சிறு வருத்தம் என்றாலும் உடனடியாக அதற்கு மருந்து எடுத்து விடுவார். குடும்ப நண்பரான வைத்தியகலாநிதி தெய்வேந்திரனிடமும் வைத்தியகலாநிதியான அவர்தம் பாரி யாரிடமும் தனது உடல்நிலைபற்றிக் கூறி ஆலோசனை கேட்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் கரிசனையுடன் சகல உதவிகளையும் செய்துள்ளனர். அவ்வாறே, இவர், தனது பிள்ளைகள் போல் கருதும் அயலில் குடியிருக்கும் னுசள யாழினி, யோகேஸ்வரன் தம்பதியரிடமும் அன்பும் ஆதரவும் பெற்றவர்.

அந்த இறுதிநாளில் கூட வழமைபோல் அவர் தன் பேரனை பாடசாலைக்கு அனுப்பி பேர்த்திக்கு உணவூட்டி யிருக்கின்றார். வழமையாக அவருக்கு நெஞ்சு நோவிருந்தால் படலையையோ அல்லது வீட்டு நிலையையோ பிடித்துக் கொண்டு நிற்பது அவர் வழக்கம். அன்று மகன் "அப்பா உங்களுடைய வருத்தத்திற்கு நீங்கள் ஆறுதலாகப் படுக்க வேண்டும்" என்று கூறியபோது "நான் இன்று சாகப் போகின்றேன்" என்று சாந்தமாகவே கூறினார். எல்லாவற்றையும் தானே பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அவர் மனைவியிடம் இருவாரங்களுக்கு முன்பே விதவைகள் ஓய்வூதிய அடையாள அட்டையையும் திருமண சான்றிதழையும் கொடுத்து கவனமாக வைக்கும்படி கூறியிருக்கின்றார். தன் இறுதிநாளை முன்கூட்டியே அறிந்த அவர் எவ்வித சலசலப்புமின்றி அமைதியாக சித்திரபானு வருடம் ஆவணியமாவாசை தொடர்வரு திரயோதசித் திதியில் புரட்டாசி மூன்றாம் நாள் ((19-09-2002) பிற்பகல்தனில் சதயநட்சத்திர நல்பஞ்சமியில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

**தமிழ்மணி தெல்லியூர் செ. நடராசாவின் ஆக்கங்களுட் சில........**

தமிழன் மாட்சி.
ஈழநாட்டில் அஸ்தியாத்திரை.
ஈழநாட்டில் நேருஜீ
ஈழநாட்டில் மதுவிலக்கு.
ஈழநாட்டில் தமிழன் மானம் பகுதி I
ஈழநாட்டில் தமிழன் மானம் பகுதி II
ஈழநாட்டில் தமிழன் மானம் பகுதி III
பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா வாழ்வும் வாக்கும்.
இளைஞர்களுக்கு அமுத மொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவரின் அரசியல் ஞானம்.
திருவள்ளுவர் பாலபோதம்.
பௌதீக, இரசாயண கலைச்சொல் அகராதி பகுதி I,II
குருளை மந்தை அமைப்பு.
ஓநாய்க் குருளை.
கலைச் சொல் அகராதி.
அமுத மொழிகள.
தங்கத் தாத்தா.
பூரண குருளையாகும் வழி.
புற்று நோய்.
கில்வெல் பேடன் பவெல் பிரபு.
இளைஞர் சாரணியம் (மொ.பெ).
இளம் பாதன்.
சாரண நடுவன்.
சாரண முதல்வன்.
வள்ளுவர் உள்ளம்.
மது விலக்கு ஈழநாடு பின்பற்றுமா.
தேசாந்தரிச் சாரணன்.
நல்லை நாவலர்.
வள்ளுவரமுது.
சிகரெட்டு புகையிலை.
வளருங்கள் கோழி.
திருமணம்.
எண்களில் மனிதவாழ்வு.
அபலைப் பெண்.
காலேஜ் காதல்.
ஆஸ்பத்திரி நர்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேவாரம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### முதலாந் திருமுறை

ஆறாடு சடைமுடியன் அனலாடும்
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடும்
குணமுடையோன் குளிருங் கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழி
நற்பண்பாடும் மிழலையாமே.

### இரண்டாந் திருமுறை

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலாம்
மையல் கொண்டஞ்சா நெஞ்சே.

### மூன்றாந் திருமுறை

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுநன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாந் திருமுறை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

ஆறாந் திருமுறை

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் காரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி.

ஏழாந் திருமுறை

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை ஆற்றூரில்
அடிகளில் வழிபோந்த அதிசயம் அறியேனே.

எட்டாந் திருமுறை

சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நின்றமலர்க் குருந்தமேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாந் திருமுறை

ஒளிவளர் விளக்கே யுவப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## பத்தாந் திருமுறை

உள்ளமே பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளித் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளமணி விளக்கே.

## பதினோராந் திருமுறை

மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

## பன்னிரண்டாந் திருமுறை

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

## நவக்கிரக தோஷமற முருகனை நாள்தோறும் வழிபடல்

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவ்ன் புந்தி கனிசா சராந்தக சேர்ந்தக வெண்ணிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளி பொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

## கந்தரநுபூதி

நேற்றுளார் இன்று மாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணேகாலம்
ஆற்றிலேன் அகண்டானந்த அண்ணலே அளவில் மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறிய னேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருட்பா

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்டா போற்றி கண்ணுதற்கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைக் கொண்டோங்கும் பேரருட் குன்றே போற்றி
சிறைதவிரத் தெனையாட்கொண்ட சிவசிவ போற்றி போற்றி.

## நல்லூர்த் தோத்திரம்

மயிலி லேறி வருமுருகா மனதின் துயரை களைந்தேட்டி
பயிலும் சீரார் படி வாழ்க்கை பணியாய்ப் பாட அருளீந்து
துயிலும் போதும் எழும்போதும் தொழிலே செய்யும் அது போதும்
அயிலைக் கைக்கொள் அதிதீரா ஆள்வாய் நல்லூர்ப் பெருமாளே.

அழகு வதனம் ஓராறும் அன்பு விழிகள் ஈராறும்
மழவு தவழும் திருமேனி மார்பிற் கடப்ப மலர்மாலை
பழகு மினிய புன்முறுவல் பக்கம் வள்ளி தெய்வானை
உழவன் கரத்து வேல் கொண்ட ஒருவா நல்லூர்ப் பெருமாளே.

கந்தனென் றுலகம் போற்ற கண்ணுத லாளன் தந்த
எந்தையே முருக வேளே ஏறிடு மயிலின் வாகா
வந்தனை செய்ய நாளும் வழிபடு கடவுள் என்னும்
தந்தியா னனின் தம்பி தலைவநல் லூரா போற்றி.

## குருவணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திருவாத வூர்திருத் தாள் போற்றி.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மப்பா

அன்பான அம்மப்பா
ஆசை அம்மப்பா
இனிப்புத் தரும் அம்மப்பா
ஈகை நீங்கள் அம்மப்பா
உண்மை இது அம்மப்பா
ஊக்கம் நீங்கள் அம்மப்பா
எம்மைக் காக்கும் அம்மப்பா
ஏற்றம் நீங்கள் அம்மப்பா
ஐயன் பதம் அம்மப்பா
ஒன்றிவிட்ட அம்மப்பா
ஓதுவ தொழியோம் அம்மப்பா
ஔவை சொன்ன அம்மப்பா
அஃதும் நீங்களே அம்மப்பா

-பாசமிகு
அப்பு வித்தகனும்,
ஆச்சி சங்கவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணையே விண்ணாக்கும் பண்பாளர்

தோற்றமும் மறைவும் தொல்பியல் என்று தேறும் பண்பே உலகை வாழ்விக்கிறது என்பது உண்மைதான் எனினும் ஒருசிலரின் மறைவு மறக்க முடியாத ஒன்றாய் மனதில் பதிந்துவிடுகிறது.

அறிவால், ஆற்றுப்படுத்தலால், அன்புசெய்வதால், மண்ணையே விண்ணாக்கும் பண்பாளர்கள் வரிசையில் இடம்பெற்றவரும் கடந்த ஐந்து தசாப்தங்களாய் கல்வி அறிவு சார்பாகவும், அயலவராகவும், நண்பராகவும் இணைந்து கொண்ட தெல்லியூர் நடராசா அவர்களின் பிரிவு ஈடுசெய்யமுடியாத இழப்பே.

அன்னாரின் தமிழ், ஆங்கில அறிவும், சோதிடப் புலமையும், மேலாகத் தன் கருத்துக்களை நிலைநாட்ட எடுத்துக்கொள்ளும் தர்க்கரீதியான வாதத்திறனும் என்நெஞ்சில் என்றும் பசுமையானதாகும்.

தெல்லியூரரின் பிரிவால் துயர் உறும் உறவினர்களுடன் துயர் பகிர்ந்து கொள்ளும் அதேபோது, அவர் ஆருயிர் இறையடி இன்பம் ஆர, அவன் திருத்தாள் வணங்கும்.

*28, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம் .*

*அன்பன்*
*க.சிவராமலிங்கம்*
*(முன்னைநாள் பிரதி அதிபர்*
*யாழ் / இந்துக்கல்லூரி )*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவுபெற்ற சிந்தனையாளர் தெல்லியூர் நடராசா

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளராக சிறிது காலத்திற்கு முன்னர் பதவியேற்ற நான் பதவிவழியாக சைவசமய விவகாரக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லை குமரன் மலரினைப் பற்றியும், குழுவின் ஏனைய சமயம் சார்ந்த செயற்பாடுகளைப் பற்றியும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பாரிய உள்ளூராட்சி நிறுவனமாகத் திகழும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தினை சிறப்பாக நடாத்திவரும் பாரம்பரியம் காலத்தால் மிக நீண்டதாக இருந்தபோதிலும் 1993 முதல் உற்சவ காலத்தில் "நல்லை குமரன்மலரினை" வெளியிட்டு வரும் பணியானது சபைக்கு புகழையும், பெருமையையும் தேடித்தரும் செயலாகும்.

இவ்வாறனதொரு நிலைமை ஏற்படவும், மாநகரசபைக்கு நற்பெயரைத் தேடித்தரவும் உள்ளத் தெளிவுடன் உதவிய அமரர் தெல்லியூர் நடராசா அவர்களை எண்ணிப் பார்க்காதிருத்தல் இயலாத காரியமாகும். சமீபத்தில் இடம்பெற்ற நல்லை குமரன் மலரின் பத்தாவது வெளியீட்டு விழாவில் பெரியவரை அழைத்து பொன்னாடை போர்த்துக் கௌரவிக்க நாம் எண்ணியிருந்த போதிலும் அவர் தளர்வினால் அவ்வெண்ணம் கைகூடவில்லை.

அமரரின் தெளிவுபெற்ற சிந்தனையினால் நூல்வடிவம் பெற்று நறுமணம் பரப்பும் நல்லை குமரன்மலரினால் குறிப்பாக சைவசமய விவகாரக் குழுவுக்கும் சிறப்பாக யாழ்ப்பாண மாநகரசபைக்கும் கீர்த்தியையும் பெருமையையும் தேடித்தர முடிந்ததில் வியப்பேதுமில்லை.

குடும்பத்தலைவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்குகொண்டு பெரியவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*இ. இராமலிங்கம்*
*ஆணையாளர், யாழ் மாநகராட்சி மன்றம்*
*தலைவர், சைவசமய விவகாரக்குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமானின் அதீத பக்தர்

"தான் ஒரு எழுத்தாளனாக வரவேண்டும்" என்ற துடிப்பு அமரர் நடராசா அவர்களுக்கு இளமைக் காலந்தொட்டே இருந்தது. அவருடைய அந்தத் துடிப்புதான் அவரை சிறந்த எழுத் தாளனாக்கியது என்றால் அது மிகையல்ல.

"வீரகேசரி" பத்திரிகைக்கு உதவி ஆசிரியராகவும், "சுதந்திரன்" பத்திரிகைக்கு ஆசிரியராகவும் கடமையாற்றிய அமரர் அவர்கள் சுயமாக இயங்விரும்பி "யாழ்ப்பாடி", "தமிழ்மணி", "ஜோதிடம்" போன்ற வார,மாத பத்திரிகைகள் சஞ்சிகைகள் நடாத்தினார். அது மட்டுமல்ல "தமிழன் மாட்சி", "தங்கத் தாத்தா" போன்ற நூல் களையும், பல சமூகசீர்திருத்தக் கதைகளையும் எழுதி வெளியிட்டார்.ஆங்கில மொழிபெயர்ப்பில் பெயர் பெற்று விளங்கிய இவர் சாரணஇயக்கம் பற்றி பல புத்தகங்களை எழுதியும், மொழி பெயர்த்தும் உள்ளார்.

அரச சேவையில் கடமையாற்றிய இவர் "அரச ஊழியர் சிங்களம் படிக்க வேண்டும்" என்ற "சட்டம்" போட்டவுடன் அரச சேவையை உதறித்தள்ளினார். தான் கற்றுக் கொண்ட சாஸ்திரத்தில் அதிக ஈடுபாடுகொள்ளத் தொடங்கினார். அதிலும் அவர் பெயர்பெற்று விளங்கினார். அவரின் திறமையறிந்து பலரும் அவரை நாடிவந்து பலன் கேட்டு நன்மை பெற்று அவரை வாயார, மனதார வாழ்த்தினர். தமிழ் மக்கள் மட்டுமல்லாது, சிங்கள மக்கள், ஐரோப்பியர் எனப் பல இனத்தவருங்கூட அவரிடம் சாஸ்த்திரம் பார்த்துத் திருப்தி அடைந்து புகழ்ந்து வாழ்த்தி கடிதங்கள் எழுதியுள்ளனர்.

அவர் முருகப் பெருமானின் அதீத பக்தர். முருகப்பெருமான் கருணையால், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் ஆதரவுடன் நான் எடுத்துக்கொண்ட முயற்சினால் நல்லூரனின் பெருமையை அகில உலகும் போற்றும் வண்ணம் "நல்லை குமரன் மலர்" எனும் மலரை 1993இல் ஆரம்பித்து ஆறுவருட காலம் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகக் கடமையாற்றிய பெருமையைத் தேடித்தந்து பத்தாவது மலரையும் பார்த்து மகிழ்ந்தார்.

அன்னாரையும் அவர்தம் குடும்பத்தையும் பலவருடங்களாக எமக்குத் தெரியும். அவரது ஆலோசனைகள், வழிநடத்தல்களால் எமக்குப் பேருதவி புரிந்துள்ளனர். நல்லூரான் திருவிழாக்காலத்தில் ஒரு மலர் வெளியிட வேண்டும் என்ற எமதவாவைப் பூர்த்தி செய்ய உதவிய பெருமை அன்னாரைச் சாரும். அவர் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் மறையாது என்பதற்கு நல்லை குமரன்மலர்" சான்று பகரந்து கொண்டே இருக்கும்.

*வைத்தியகலாநிதி இ தெய்வேந்திரன்*
*மருத்துவ இயக்குநர்,*
*சென்றல் நேஸிங் ஹோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழ்ப்பற்று மிகு செம்மல் எங்கள் தெல்லியூர்

தன்னை ஈன்ற தாயின்மீது அளவிறந்த பற்றுக்கொண்டு வாழ்ந்த தெல்லியூர் அவர்களுக்குத் தாய்நாட்டின் மீதும், சைவத்தமிழ் மீதும், தமிழ் மக்கள் மீதும் பற்று மிகுந்து காணப்பட்டதில் வியப்பேதுமில்லை.

தமிழ் மக்களின் வரலாற்றில் மகத்தான பங்கு வகித்த "சுதந்திரன்" (தினப்)பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியராகத் திகழ்ந்த அமரர் தெல்லியூர் அவர்கள், தமிழினம் சோதனைக்குட் பட்டிருந்த வேளையில் காலத்தின் தேவையறிந்து "தமிழன் மாட்சி" எனும் நூலை எழுதி, வெளியிட்டு தமிழரின் தனித்துவம், தமிழர் தாயகம் என்பவற்றை வலியுறுத்தி தமது இனப்பற்றை வெளிக்காட்டியிருந்தார்.

பத்திரிகைத்துறையிலிருந்து ஓய்வுபெற்று சைவசமய வளர்ச்சி க்காகத் தம்மை அர்ப்பணித்து பல நூல்களையும், கருத்தாழம் மிக்க பல கட்டுரைகளையும் பத்திரிகைகள் வாயிலாக எழுதி வெளியிட்டுக் கொண்டிருந்த வேளையில், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் முன்னோடித் தலைவராகத் திகழ்ந்த வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் மூலம் எமக்கு அறிமுகமான அமரர் அவர்கள் பழகுவதற்கு இனியவர் பண்பாளர் ஆசார சீலர் குழந்தை உள்ளம் கொண்டவர்.

வருடாவருடம் நல்லைக் கந்தனின் உற்சவ காலத்தில் மலர் ஒன்றினை வெளியிடவேண்டும் என்று எமது குழு 1993இல் தீர்மானித்தபோது பத்திரிகைத்துறையிலும் அச்சிடும் கலையிலும் மிகுந்த தேர்ச்சியும் அனுபவமும் மிக்க தெல்லியூர் அவர்கள் எமது மலரின் கௌரவ பதிப்பாசிரியராகப் பதவியேற்று, "நல்லை குமரன்மலர்" என அம்மலருக்குப் பெயர்சூட்டி, பத்தாண்டுகள் வரை நன்கு கவனித்து, வேண்டிய ஆலோசனைகளையும் வலிந்து வழங்கியமையை எமது குழு என்றும் நினைவிருத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மலரிலும் தமது ஆக்கங்களை பல்வேறு புனைபெயர்களில் எழுதி மலருக்குப் பெருமை சேர்த்த பெரியார் அமரர் தெல்லியூர் அவர்கள். தனது கருத்தினை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவர் விடாப்பிடியாக இருந்த சந்தர்ப்பங்களை நாம் பலதடவைகள் சந்தித்துள்ளோம். அவருடன் வாதிட்டு வெல்லமுடியாது எமது மாற்றுக் கருத்து க்களைக் கைவிட்டு அவர் கருத்துக்களை ஏற்றுச் செயல் பட்டோம் என்பது உண்மை. அதனால் வெற்றியும் கண்டோம்.

அமரர் அவர்கள் பல தடவைகள் எமது குழுவினால் கௌர விக்கப்பட்ட போதிலும், அண்மையில் இடம்பெற்ற பத்தாம் ஆண்டு நல்லை குமரன்மலர் வெளியீட்டு விழாவில் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க நாம் தீர்மானித்திருந்தும் அவரது உடல்நிலை காரணமாக எமது தீர்மானம் நிறைவேறாது போனதேயென்ற தீராத ஆதங்கம் எமது குழுவுக்கு ஏற்பட்டு விட்டது. நல்லை குமரன் மலர் மணம்பரப்ப தெல்லியூர் நாமம் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

தமிழ்மொழி மீது பற்றுமிகுந்திருந்த அமரர் இறுதி மூச்சுவரை தமது துறைகளில் அதீத அக்கறை செலுத்தி அரும்பணி யாற்றினார். அவரது மறைவினால் சைவத் தமிழ் உலகிற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பட்டிருக்கும் தமிழ்மணி தெல்லியூர் நடராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தன் தாள் பணிந்து பிரார்த்திப் போமாக.

*இரா இரத்தினசிங்கம்*
*செயலாளர், சைவசமய விவகாரக் குழு*
*யாழ் மாநகராட்சி மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகுவதற்கு இனிய பண்பாளர்

சைவசமய விவகாரக் குழுவின் தலைவராக விளங்கிய வைத்தியகலாநிதி தெய்வேந்திரன் அவர்களின் மூலம் அறிமுகமான அமரர் தெல்லியூர் நடராசா அவர்களை நல்லை குமரன் மலருக்குப் பதிப்பாசிரியராக நாம் பெற்றுக் கொள்வதற்கு முருகன் அருளே துணை நின்றது. அவன் அருளாலே எம் மலருக்கு "நல்லை குமரன் மலர்" என்று பெயரும் சூட்டினார்.

சைவசமய விவகாரக்குழுவின் பொருளாளராக யாம் செயற்பட்டபோதிலும் பெரியவர் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவருடன் நெருங்கிப் பழகிய பாக்கியசாலி யான் ஒருவனே. குழந்தை உள்ளம் கொண்டவர் பொறுமை சாலி தமது கொள்கையில் பிடிவாதமாக இருந்து வெற்றி கொள்பவர்.

அண்மையிலும் அவரைக் கௌரவிக்கும் பொருட்டு பத்தாவது மலர் வெளியீட்டுக்கு அழைத்தபோது "எனது மனம் மிக மகிழ்ச்சி யடைகின்றது ஆனால் உடல்நிலை வர இடந்தரவில்லை" என்றார். அதனை ஒருபோதும் மறக்கமுடியாது.

நன்றி மிக்க நல்லுள்ளங்கள் உள்ளவரை தெல்லியூர் அவர்களின் நாமம் நிலைத்திருக்கும்.

பெரியவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

**து.சோமசுந்தரம்**
*பொருளாளர், சைவசமய விவகாரக் குழு*
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாங்கு வாழ்ந்த 'தமிழ் மணி' ஐயா

யாழ் மண்ணின் மூத்த எழுத்தாளர் மூதறிஞர் "தமிழ்மணி" தெல்லியூர் நடராசா அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டாரென்பதை எண்ணும்போது நெஞ்சம் கனக்கிறது. மூத்த பத்திரிகையாளராக, எழுத்தாளராக, சோதிட அறிவாளராக வாழ்ந்த தெல்லியூர் நடராசா அவர்கள் எழுத்துத் துறையில் தனக்கென ஓர் தனியிடத்தை வசித்தவர்கள்.

வீரகேசரி, சுதந்திரன் ஆகிய செய்தி ஊடகங்களின் பத்திரிகையாளராகக் கடமையாற்றிய அவர் சைவத்தமிழ்ப் பற்றுடையவராக விளங்கினார். யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவினால் 1993ஆம் வெளியிடப்பட்ட "நல்லை குமரன்மலரின்" பதிப்பாசிரியராக ஆலோசகராக இருந்து அம்மலரின் வருகைக்குப் பெரும் பணியாற்றிய "தமிழ் மணி" அவர்களோடு நல்லை குமரன் மலரின் உதவிப்பதிப்பாசிரியராக இருந்த அந்தநாள் நினைவுகளை, அவர் எனக்கு வழங்கிய ஆலோசனைகளை எண்ணும்போது நிலையாமையின் வேதனை என் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது.

2002ஆம் ஆண்டில் பத்தாவது மலராகப் பூத்த நல்லை குமரன்மலருக்கு நல்லதொரு வடிவமைப்பை உருவாக்கிய அவர் ஹஜரதன், உமாபதி, தெல்லியூர் அம்பி, முல்லை முருகன், நானா ஆகிய புனைபெயர்களில் ஆக்கங்களை நமக்குத் தந்தவர்.

சாரணியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டஅவர் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் சாரணிய நூல்களை வெளியிட்டார். அமைதியான, அடக்கமான எழுத்தாளராக வாழ்ந்த தெல்லியூர் நடராசா அவர்கள் தீர்க்கதரிசனம் மிக்கவராக விளங்கியவர் என்பதை அவரோடு பழகியவர்கள் நிச்சயம் தெரிந்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சிறப்புடைய பெரியார் இரக்ககுணம் மிக்கவர். மனம்விட்டு உரையாடுபவர். இல்வாழ்க்கைத்துணையை நல்மக்கட் பேற்றைப் பெற்று பேரோடும் புகழோடும் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அவர் இன்று நம்மத்தியில் இல்லையே என்ற நெஞ்சத்து நெருடலோடு அவரின் ஆத்மா எல்லாம்வல்ல நல்லைக் கந்தனின் திருவடிகளில் நித்திய பேரின்பம் அடையப் பிரார்த்திப்பதோடு, அவர்தம் குடும்பத்தார்க்கும் எமது மனம்நெகிழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-- ஓம் சாந்தி --

*ந. விஜயசுந்தரம்*
*பதிப்பாசிரியர், நல்லைக்குமரன் மலர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிவளர் விளக்கு

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதினாலல்ல அவர் எப்படி வாழ்ந்தார் என்பதிலேயே அவர் பெருமை தங்கியுள்ளது. தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் சேவை செய்து "தமிழ்மணி" என்றும் "சோதிடப்பேராசான்" என்றும் பாராட்டப்பட்ட சமூகத் தொண்டன் தெல்லியூர் செல்லையா நடராசா அவர்கள் மறைந்தும் மறையாத மாமணியாகத் திகழ்கின்றார். அமரராகி விட்ட அன்னாரின் அளப்பரிய சேவையை என்றும் தமிழ் இனம் மறக்கமாட்டாது. காரணம்: வீரகேசரிப் பத்திரிகைமூலம் பத்திரிகை உலகில் தம் சேவையைத் தொடங்கிய அவர் சுதந்திரன் தினப்பத்திரிகை மூலமும், "தமிழ் மணி","இளைஞன்", "ஜோதிடம்" போன்ற தமது சொந்த வெளியீடுகள் மூலமும் தமிழ் இலக்கி யத்தை வளர்த்தார் எழுத்தாளர்களை வளர்த்தார் தமிழ் அரசியலை வளர்த்தார் அரசியல் தலைவர்களை வளர்த்தார்.

இந்த ஒளிவளர் விளக்கை தெல்லிப்பளையில் 1923 ஆம் ஆண்டு அன்னை ஏற்றி வைத்தாள். கல்வி எனும் எண்ணெயை இடையறா ஊற்றி ஆசீர்வாதம் எனும் திரியையும் இட்டாள். விளக்கு பிரகாசித்தது. இந்தப் பிரகாசத்தில் தான் எழுத்தாற்றல், சமயச் சிந்தனைகள், சோதிடக்கலை என்பன பிரகாசித்தன. கந்தர்மடமே நடராசர்மடமாகப் பிரகாசித்தது என்று கூறலாம்.

பொறுமைசாலியாகவும், இன்சொல் வல்லானாகவும், சொல்லே ருழவனாகவும், கருணைமிகுந்தவராகவும், பேருபகாரியாகவும் வாழ்ந்த காந்தியவழிப் பெரியாரை இன்று நாம் இழந்துவிட்டோம்.

இவ்வுலகில் இருக்க வந்தவர் எவருமில்லை. காலையில் இருந்தவர் மாலையில் இல்லை. மனிதன் முடிவு மரணம்தான். தனது மரணத்தைத் தீர்க்க தரிசனமாய் அறிந்து சோதியைத் தொழுது, மெல்லத் துறந்தார் தெல்லியூர் தந்த செல்வர் தமிழ்மணி எனும் நடராச மாமணி.

சாந்தி, சாந்தி, சாந்தி!!!

*திரு க தம்பு*
*ஓய்வுபெற்ற அதிபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேறுதலும் பிரார்த்தனையும்

எமது மதிப்புக்குரிய அறிஞர் தெல்லியூர் நடராசா அவர்களது மறைவு மனதிற்கு வேதனை தந்த நிகழ்வுகளுள் ஒன்றாகும். அமரர் தெல்லியூர் நடராசா அவர்களை நான் 1960களில் இருந்து அறிவேன். அப்போது அவர் எனது தந்தையாரின் நண்பர் என்ற முறையில் எனக்குத் தெரிந்திருந்தார். அதன் காரணமாக "தமிழன் மாட்சி", "சாரணக்குருளைகள்" போன்ற தெல்லியூரர் எழுதிய நூல்களை சிறுவயதிலேயே வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர் ஒரு பல்துறை அறிஞர் என்ற கருத்து சிறுவயதிலேயே மனதிற் பதிந்தவொன்று. பின்னர் ஒரு சில தசாப்தங்களின் பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பும் சமயங்களில் சிலபோது அவரைக் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் உரையாடும்போது அவரது பல்துறை அறிவாழத்தைக் கண்டு பூரிப்படைவேன். அவர் யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் வெளியிடும் "நல்லை குமரன்மலர்" என்ற தரம்வாய்ந்த சஞ்சிகையின் கௌரவ பதிப்பாசிரியாரக பணியாற்றிய போது, 1994ஆம் ஆண்டு வெளிவந்த மலரை யான் மதிப்பீடு செய்ய வேண்டுமென விரும்பினார். அவ்வேண்டுகோளை ஏற்று என்னாலானதைச் செய்தேன்.

தமிழ், சமயம், சோதிடம், உடல்நலம், சாரணீயம், வரலாறு, அரசியல் ஆகியவற்றில் எவற்றைப் பற்றியும் ஆதாரங்களுடன் எடுத்து விளக்கவல்லவொரு அறிவுக்களஞ்சியமாக விளங்கியவர் தெல்லியூர் அவர்கள். இத்துறைகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமைக்குச் சான்றாக அவர் எழுதிய நூல்கள் அமைந்துள்ளன. தெல்லியூர் எழுதிய நூல்கள் அவரது ஆங்கில, வடமொழி அறிவுக்கும் சான்றாக அமைகின்றன.

எழுத்துத் துறையே தமக்கு இதமான தொழிலாகக் கருதிய தெல்லியூரர் தமக்கு கிடைத்த எண்பார்வைத் திணைக்களத்து உத்தியோகம், மொழிபெயர்ப்பாளர் உத்தியோகம் என்பவற்றை உதறியெறிந்துவிட்டு எழுத்துலகிலேயே தன்னை இணைத்துக் கொண்டார். "இந்துசாதனம்" பத்திரிகையின் உதவி ஆசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து நாவலர் முன்னெடுத்த கந்தபுராண மரபுவழித் தமிழர் கலாசாரத்தையும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் வளர்த்தெடுக்கப் பணியாற்றினார். "வீரகேசரி", "சுதந்திரன்" போன்ற பத்திரிகைகளில் இணைந்து, தமிழர் உரிமைப் போரா ட்டங்களுக்கு வலுவூட்டுவதில் குறிப்பிடத்தக்க பணியாற்றினார்.

பழகுவதற்கு மிக இனியவர் தெல்லியூரர் அவர்கள். என்றும் சிரித்த முகத்துடன் வரவேற்று நல்லன கூறும் பண்பாளர் அவர். இத்தகைய பண்புகள் நிறைந்த தெல்லியூர் நடராசா அவர்களது மறைவு தமிழ் எழுத்துலக்கும் அவரது நணபர்களுக்கும் உறவினர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. ஒரு நல்ல மனிதனை சமூகம் இழந்துவிட்டது. அது எமது துரதிட்டம்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'

என்ற பொய்யாமொழியாரின் கருத்தாழமிக்க கூற்றைச் சிந்தித்துத் தெளிந்து தேறுதல் அடைந்து தெல்லியூராரது ஆன்மா இறைவனது திருவடிகளில் என்றும் இன்பம் பெருக நிலைபெறப் பிரார்த்திப்போம். அவரது பல ஆக்கங்கள் அச்சேறாத நிலையிலுள்ளன. அவற்றை வெளிக்கொணர்தல் பயனுள்ள பணியாகவும் அவரது பணிகளை என்றும் பசுமையாக நினைவில் வைத்திருக்கும் ஒரு முயற்சியாகவும் அமையும்.

*பேராசிரியர் இ குமாரவடிவேல்*
*விஞ்ஞான பீடாதிபதி*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளன், நூலாசிரியர், சோதிடஆசான் என பன்முகம் கொண்ட அறிஞர்

ஆழ்ந்த அறிவு அகலமான சிந்தனை செய்திகளைச் சொல்வதில் தீர்க்க தரிசனம், தனக்குப்பட்டதை அஞ்சாது தெரிவிக்கும் திறமை என்பன அமரர் தெல்லியூர் செல்லையா நடராசா அவர்களிடம் காணப்பட்டன.

நான் மாணவனாக இருந்த காலத்தில் "தமிழ்மணி" என்னும் பத்திரிகையை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வசனத்தின் வீச்சு, இனிமை, எளிமை, அழகு என்போன்ற பலரை அந்தப் பத்திரிகையைப் படிக்கத் தூண்டியது. தமிழ்மணி பத்திரிகை முதல் இதழ் 18-05-1946 இல் வெளிவந்தது. இப் பத்திரிகையில் தமிழ் இளைஞர் மன்றம் அவரால் ஆரம்பிக்கப்பட்டு பல இளைஞர்களை எழுதத் தூண்டியது. இந்த தமிழ்மணி பத்திரிகையில்தான் முதல்முதல் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "நாமகள் ஆசைப்பத்து" எனும் தொடர் வெளிவந்தது. அத்தோடு "வாழ்வுப் போதில் அக்கப்போர்" எனும் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. அமரர் தெல்லியூரார் "சுடலையாடி" என்ற புனைபெயரில் சமுதாய சீர்கேட்டைச் சாடினர். எங்கெங்கு சமுதாய சீர்கேடு காணப்பட்டதோ அங்கங்கு அவர் சென்று அதன் சரிபிழையை அறிந்து உண்மை நிலையை வெளிப்படுத்தினார்.

அவர் சமுதாயத்தைச் சாடினதோடு நிற்காது பொதுசன மேடை என்ற ஒரு பகுதியை ஆரம்பித்து மக்களும் தமது பிரச்சனைகளை அந்த மேடை மூலம் தெரிவிக்க உதவினார். "யாழ் பாடி" என்ற பத்திரிகையையும் அவர் வெளியிட்டார். இப்பத்திரிகை 08-09-1950 இல் வெளிவந்தது. இப்பத்திரிகையும் வாசகர்களைக் கவரும் அடுக்கு மொழிவசனங்கள் காணப்பட்டன. இளைஞர்களான வாசகர்களைக் கவரும் வண்ணம் சுடலையாடி என்ற புனை பெயரில் "காலேஜ் காதல்" என்ற நாவலைத் தொடராக எழுதினார். இந்நாவல் பின்னர் நூலாக வெளிவந்தது.

1948ஆம் ஆண்டு "சுதந்திரன்" என்ற தினசரி வெளிவந்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் ஆசிரியராக பணியாற்றினார் அமரர். சுதந்திரன் பத்திரிகை வாரப்பத்திரிகையாக வெளிவந்த பொழுது அதிலிருந்து விலகி வீரகேசரிப்பத்திரிகையின் துணையாசிரியராக கடமையாற்றினார். "தமிழ் மணி" வெளிவந்த காலத்தில் இளைஞன் வார வெளியீடு வெளிவந்தது. 1952ஆம் ஆண்டு "விஞ்ஞான கலைச்சொல்" அரங்கில் தமிழ் அகராதியை வெளியிட்டு விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கு பெரிதும் உதவினார். அத்தோடு நிற்காது பொது விஞ்ஞான நூல் பகுதி 1, 2 என பல நூல்களை வெளியிட்டார். தமிழ் மக்களுக்கு தமது மொழியின் சிறப்பு தெரியாது இருந்த போது "தமிழன் மாட்சி" என்ற நூலை 1947ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார்.

சாரண மாணவர்களுக்காக அமரர் நடராசா அவர்கள் ஆங்கிலத்திலிருந்து பல நூல்களை வெளியிட்டார். "ஓநாய்க் குருளை", "குருளை மந்தைப்படைப்பு", "பூரண குருளை ஆகும் வழி", "இளைஞரும் சாரணியமும்", "சாரணிய நடுவன்", "சாரண முதல்வன்" என்ற பல நூல்களை எமக்குத் தந்துள்ளார். சாரண இயக்கத்தை எமக்கு அறிமுகப்படுத்திய "பேடன்பவல்" என்ற நூலையும் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அமரர் தெல்லியூர் நடராசா அவர்கள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்மீது பக்தி கொண்டவர். அவருடைய கவிதைகளை நன்கு ரசித்ததன் காரணமாக "தங்கத் தாத்தா" என்ற நூலை வெளியிட்டார். இதன் மூலம் இக்கால மாணவர்கள் அவரைப் பற்றி நன்கு அறிய பெரிதும் உதவினார். இதே போல் மகாத்மா காந்தியிலும் அவர் ஒரு பக்தனாக இருந்தார். அவர் இறந்த பொழுது அவரைப் பற்றி பல கட்டுரைகள் எழுதினார். அதோடு நில்லாது "எங்கள் பாபுஜி" என்ற நூலையும் எமக்குத் தந்துள்ளார். இவை தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்தன.

அமரர் அவர்கள் இலக்கியத்தோடு நில்லாது சோதிடப் பேராசானகவும் பிரகாசித்தார். இதன் காரணமாக "ஜோதிடம்" என்ற ஆங்கில, தமிழ் மாதாந்த சஞ்சிகையை பல வருடங்கள் வெளியிட்டார்.
சோதிடத்துக்காக தன்னை நாடி வந்த அனைவரையும் அன்புடன் வரவேற்ற பெருமகன் அவர். அவர் எனக்குத் தெரிய எவரிடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை ரூபா தரவேண்டும் எனக் கேட்டது இல்லை. பணம் கொடுத்தால் கொடுத்ததை வாங்குவார். பணம் கொடாவிட்டால் சரி வாருங்கள் என அன்புடன் வழி அனுப்பி வைப்பார்.

பிற்காலத்தில் அவர் உடல்நலமின்றி இருக்கும் பொழுதும் தன்னிடம் வந்திருந்தவர்களுக்கு தளராது சோதிடம் சொன்னதை நான் அறிவேன். 1950களிலே இவர் இளைஞனாக இருந்த பொழுது இவரது ஆற்றல் போற்றத்தக்கது. இவர் பல பத்திரி கைகள் வெளியிட்டது போல் வேறொருவர் இலங்கையில் வெளி யிட்டதாக எனக்குத் தெரியவில்லை. தன்னிடம் சொந்த அச்சகம் இல்லாத பொழுதும் பல நூல் பத்திரிகைகளை வெளியிட்ட துணிவு, பல நூல்களை மக்களுக்குத் தந்த பான்மை, சோதி டத்தில் அவருக்கிருந்த திறமை, சோதிடத்திற்காக மாதச் சஞ்சி கைகளை வெளியிட்ட பான்மை - இவற்றை வைத்துத்தான் இதை நான் சொல்கிறேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாண எழுத்தாளர்களோடும், எழுத்தாளர் சங்கங்களோடும் ஈடுபாடு காட்டியது இல்லை. பிற்காலத்தில் சோதிடத்திலேயே தனிக் கவனம் செலுத்தினார். தனது தாயாரை தெய்வமாக நெஞ்சில் நிறுத்தினார். தாயாரைப்பற்றி எங்களுக்கெல்லாம் அவர் குறிப் பிடும் பொழுது உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் சிந்தியவர். "நல்லை குமரன் மலர்" வருடம் தோறும் வெளிவர மூலகாரணமாக இருந்த தோடு அதில் ஆழமான மெய்ப்பொருள் கருத்துக்களை வைத்து எழுதினார். சில ஆண்டுகளுக்கு முன் "யாழ்ப்பாண மாநகரசபை இந்து சமய விவகாரக்குழ" அவரை கௌரவித்து பொன்னாடை போர்த்தியதை சைவ மக்கள் நன்கு அறிவர். யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் ஒரு செடியில் பூத்த இரு மலர்கள் என அறிஞர் பாராட்டுவர். அதனை கடைசிவரை கடைப்பிடித்து சைவசமயத் தையும் தமிழ்மொழியையும் இரு கண்ணாகப் போற்றினார். அன்னாரின் மறைவு தமிழ் இலக்கி யத்துக்கு ஏற்பட்ட பெரும் நஷ்டமாகும். அவர் மறைவினாலே துயருறும் அவரது மனைவி, பிள்ளைகளுக்கு யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*"செல்வகம்"*
*ஆனைக்கோட்டை.*

*புத்தொளி ந.சிவபாதம்*
*பொருளாளர், யாழ் இலக்கியவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை தந்தவர்

அமரர் தெல்லியூர் நடராசா ஐயா அவர்களின் ஆத்மாவின் சாந்திக்கு நாம் பிராத்திக்கும் இவ் வேளையில் சில சிந்தனைகள் தோன்றுகின்றன. சில ஞாபகங்களும் புலர்கின்றன.

நாம் முற்றாக விளங்கிக் கொள்ளாத பழைய விடயங்கள் பல உண்டு அதில் ஒன்று சோதிடம். ஒன்று விளங்காவிட்டால் அதை எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பது, அல்லது நியாயம் இல்லாது நிந்திப்பது இலேசான ஒரு வழி. அல்லது அதை ஒருவருக்கு வாய்ப்பாகக் கையாள்வது பரவலான முறை. இதில் சோதிடம் தப்பிப் பிழைக்க இல்லை.

"பிரசித்தி பெற்ற" போலி மருத்துவர்கள் போல் "பேர்பெற்ற" போலி சோதிடர்களும் உண்டு. உடலில் ஒரு கட்டியைப் பார்த் ததும் கான்சர் என்று பயப்படுத்துபவர்கள் போல், கிரகத்தின் ஒரு வீட்டைக் காட்டியும், பஞ்சாங்கத்தைப் பார்த்து எண்கள் போட்டுக் கூட்டிப் பலன் சொல்லியும் ஒருவர் வாழ்க்கையின் நிகழ்வுகளை துவம்சம் செய்த மனிதர் உண்டு.

எனது அறிவுக்கு அப்பாற்பட்ட இயலாக சோதிடம் இருப்பினும், அதில் ஆழமான நுட்பமான உண்மைகள் இருப்பதாகவே தோன்றுகிறது. சோதிடம் வெறும் கூட்டல் கழித்தல் அல்ல, அதிலிருந்து உண்மைகளை அறிவதானால், கணிதவியல் மொழியில் பலதரப்பட்ட Multivariate Analysis தேவைப்படுவது நிச்சயம். எமது நாட்டில் சமீப காலத்தில் இத்தகைய ஆய்வு நிலையில் சிந்தித்த சோதிட இயலாளர் சிலரில், நண்பர் தெல்லியூர் நடராசா ஒருவராவார். அவர் தனது சோதிட அறிவையும் ஞானத்தையும் "தடுப்பு மருத்துவம்" போல் உப யோகித்தார்.

அவர் கூறுவார்: நெடுஞ்சாலையில் ஓரங்களில் அறிவிப்புப் பலகைகளில், "வழுக்கல் தெரு", "வளைவுகள் அதிகம்", "திடீர் திருப்பம்","ஏற்றம்", "பள்ளம்" இப்படியாக அறிவிப்புகள் இருந்தால் அவ்வழியே போகப்படாது என்ற அர்த்தம் அல்ல. கவனமாகப் போகவும் என்பதுதான் அறிவுறுத்தல். சோதிடமும் வாழ்கை என்ற நெடுஞ்சாலையில் பிரயாணம் செய்பவர்களுக்கு இப்படித்தான் அறிவுரை கூறவேண்டும். அவர் அவ்வாறே கிரகங்களின் கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளின் பாதிப்புகளை விளக்கியதால், அவரின் அறிவுரைகள் நம்பிக்கை தருவதாக அமைந்தன.

1962 - 1967 காலகட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் அவருடன் தொடர்பு எனக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தந்தன. அரசியலில் தீவிர நாட்டம் கொள்ள விரும்பிய எனக்கு அந்தத் துறை எனக்கு ஏற்றதல்ல என்று கூறியவர் அவர். நான் அந்த அறிவுரையை ஏற்றுக்கொண்டேன். இப்படியாக அவரது பல விதமான தனி ... குடும்ப ஆலோசனைகளால் வாழ்க்கையை அமைத்தவர்கc

தெல்லியூர் முதன்முதலாக எனக்கு அறிமுகமானது சோதிடம் மூலம் அல்ல. எழுத்துலகத்தில், 1948க்குப் பின்னைய வருடங்க ளில் அவர் சுதந்திரன் பத்திரிகையில் இருந்தார். நான் மருத்துவம் கற்பதற்கு பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்த காலம். சோதிடத்தின் எதிரியாக, அதாவது "சீர்திருத்தவாதி" யாக இருந்த காலம். "ஜெய்ஹிந்த் சாஸ்திரி" என்ற புனைபெயரில் நையாண்டி சோதிடக் கட்டுரைகளை சுதந்திரனிற்கு அனுப்பிக் கொண்டிருந்தேன்.

அப்போது நேரடித்தொடர்பு அதிகம் இல்லை. ஆனால் ஒரு முறை நேரில் சந்தித்தபோது "எழுத்தில் சத்தியம் இருக்க வேண்டும். அரசியல் நன்மைக்காகவோ, பணத்திற்காகவோ, எக்காரணம் கொண்டும் எழுத்தை எழுத்தாளன் அடகு வைக்கப்படாது" என்று ஆவேசமாகப் பேசினார். சந்தர்ப்ப சூழல் ஞாபகம் இல்லை. வார்த்தைகள் மட்டும் மனத்தில் பதிந்தன.

அவர் அன்று எனக்குக் கூறியது போல் எழுத்தில் மட்டுமல்ல சோதிடத்திலும், பேச்சிலும் சத்தியத்தையும் கடைப்பிடித்தார். அவர் பல பத்திரிகைகளை நடாத்தினார். அதன் விபரம் இந்த நினைவு மலரில் பிறிதோர் இடத்தில் காணப்படும்.

கடந்த சில வருடங்களாக, அவர் எம் மத்தியிலே மூத்த முதியவராக இருந்தார். இளைய முதியவர்களுக்கு ஓர் ஆதர்ச அண்ணாவானார். அவர் வாழ்வு அமரத்துவம் அடைந்து விட்டது. அவர் வாழ்வு நினைப்பதற்கு இன்பம் தரவல்லது. சாந்தி!

*"நந்தி"*
*மருத்துவக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜனது ஆடலரங்கு

"எப்பவோ முடிந்த காரியம்'
'ஒரு பொல்லாப்பும் இல்லை'
'முழுவதும் உண்மை'

தமிழர்கள் மத்தியில் ஓர் எழுச்சிப் பேருருவாக, காலத்தால் அழியாத சொத்தாக, கலங்கரை விளக்காகத் திகழ்ந்தவர் மாண்புமிகு தெல்லியூர் செல்லையா நடராசா அவர்கள். அவர் இளைஞனாக இருந்த காலந்தொட்டு இற்றைவரை அரும்பெரும் சாதனைகளை நிலைநாட்டியவர். ஏன், யோகசுவாமிகள் தன்னைப் பொருட்படுத்தவில்லை என்பதற்காக அவருக்குக் கல்லெடுத் தெறிய நினைக்க, அதனை உணர்ந்த யோகசுவாமிகள் அவரை சாந்தப்படுத்தி யனுப்பிய சுவாராசியமான கதைபற்றி அடிக்கடி கூறுவார். அச்சம்பவம் பற்றி விரிவான ஒரு கட்டுரை தருமாறு சிவதொண்டன் நிலையம் சம்பந்தப்பட்டோர் கேட்டனர். அதற்கு இணங்கி இறுதிக்காலத்தில் வரைந்து வைத்துவிட்டு சென்றுள்ளார். இவர் பல புத்தகங்களை அச்சேற்றியுள்ளார். பல ஆங்கிலப் புத்தகங்களை மொழி பெயர்த்து அச்சுவாகனம் ஏற்றியுள்ளார் "தமிழன் மாட்சி", "இளைஞர் சாரணியம்" என்று அவர் படைப்புகள் நீண்டுசெல்லும். அது மட்டுமின்றி "இளைஞன்" என்ற பத்திரிகையை 1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தியுள்ளார். அதில் புரட்சிகரமான கருத்துக்களை தனது கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார்.

"சாதாரண மக்கள் உரிமைகள் நசுங்குகின்றன'
'தனிமனித சுதந்திரம் காக்கப்பட வேண்டும்'
'ஜனநாயகத்தைக் காப்பாற்ற வழி'

என்றவாறு தலைப்பிட்டு வந்தவொரு கட்டுரை, "இன்றைய இளைஞர்கள் உணரவேண்டும்" என்று தலையங்கம் இட்டு வந்த கட்டுரை, "உறுதி வேண்டும்" என்ற ஆசிரிய தலையங்கம் ஆகியவற்றுடன் மிகவும் சிந்திக்க வைத்த ஒரு செய்யுள் எவரையும் பிரமிக்கவைக்கும் பாடலாகும். "தமிழரசு" என்ற புனைபெயரில் 1947 இல் எழுதி வெளிவந்தது. "ஆள்க இன்றேல் மாள்க" என்று 1947இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட கனா இன்று நனவாக உருப்பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அப்பாடலை இங்கே தருகிறேன்:

*புலிக்குகையில்*
*பூனையது ஆட்சி என்றால்*
*பூரித்து வாழ்ந்திடுமோ*
*புலிகளிங்கு*
*எலியன்னார் தமிழ்நாட்டை*
*ஆட்சி செய்ய*
*இருக்கின்றார் தமிழரெனில்*
*மானமுண்டா?*
*புலிநிகர்த்த படைசேர்ப்பீர்*
*தமிழ் வீரர்காள்!*
*புன்மைகாண் உயிர்பெரிது*
*என்னுமெண்ணம்*
*மலிந்தபுகழ் தமிழாட்சி*
*செய்க இன்றேல்*
*மானமுடையீர் நீத்தல்*
*மாண்புடைத்தாம்!.*

இவர் கட்டிக்காத்து சேர்த்து வைத்த தமிழர் பொக்கிஷங்கள் பல 1995 இடம்பெயர்வு காலத்தில் காணாமல் போயின, பல சிதைந்தும் போயின. அதனால் பெரிதும் மனமுடைந்த நிலையில் காணப்பட்டார். ஆயினும் தப்பியிருந்த சிலவற்றை இறுதிமூச்சு வரை பேணுவதில் ஆர்வமாக இருந்தார். அன்னார் கனா நனவாகக் காலம் கனிந்துவிட்டது என்றே தோன்றுகிறது.

இந்தியப்படையெடுப்புக் காலத்தில் நிகழ்ந்த ஒரு ருசிகரமான சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் ஆர்வலராக இருந்த காரணத்தினால், இவர் தனிப்பட்ட சில புல்லுருவிகளின் சதியினால், இராணுவத்தினால் தாக்கப்பட்ட கட்டங்களுமுண்டு. இந்தியப் படைத்தளபதி திரு. சசிகுமார் இவரை கோண்டாவிலிலிருந்த படைத்துறைத் தலைமை யகத்திற்கு அழைத்து விசாரித்துள்ளான். இவரோ தான் எதுவும் சொல்வதற்கில்லையென்று கதிரையிலேயே பத்மாசனத்தில் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். இவரது வழமையான "தாயே கோயில், தந்தையே மந்திரம்" என்ற நிலையில் தாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தில் ஆழந்துவிட்டார். இவரின் அந்த தெய்வீகநிலையைப் பார்த்ததும் அந்த இந்திய அதிகாரிக்கு என்னசெய்வ தென்றே தெரியவில்லை. சுவாமி என்று அழைத்துத் தனக்கு ஏதாவது சொல்லுவீர்களா என மனமுருகவேண்டினான். அவர் அதற்கு இன்ன திகதிக்கிடையில் ஒரு பதவி உயர்வு கிடைக்கும் என்று கூறினார். அவரைக் கதிரையிலிருந்து மெள்ள இறக்கி வீட்டில் கொண்டுவந்து விட்டுச்சென்றான். தொடர்ந்தும் வாக்குக்கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இவரது வீட்டிற்கு அடிக்கடி வரலானான். அறுபத்தெட்டாம் வயதிலும் இத்தமிழரறிஞர் பட்டதுயர் கொஞ்சநஞ்சமல்ல. இவருடன் இவர்குடும்பமே சண்டமாருதச் சுழிக்காற்றில் சிக்குண்டு பட்டதுயர்களை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இவர் 1947இல் எழுதிய சில கட்டுரைகளே இவரது வாழ்க்கையில் புயலாக மாறியதென்றால், தமிழர்நம் நிலையை எண்ணி நோவமா, விதியின் விளையாட்டை அளக்க வல்லார் யாருளரென நோவோமா?

இவர் ஒரு சோதிட ஆய்வாளர். இவரை சோதிடர்கள், ஆய்வாளர்கள், வல்லுநர்கள் என பலரும் இவருடன் வந்து ஆலோசிப்பார்கள். ஒரு சோதிடக்குறிப்பினைப் பார்த்த பார்வையிலேயே எதிர்வுகூறும் சோதிட ஆசானாக விளங்கினார்.

மணல்தறை அம்மனின் அற்புத அருளாட்சி செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் இருந்துள்ளார். மணல் தறை அம்மனின் பணிப்பின்பேரில் அவரது அடியாரொருவர் இறுதிக்கிரியையில் இன்னோரன்ன உதவிகள் புரிந்து. அன்னாரது பேழையைத் தாங்கியும் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரார்த்தவினையின் தாக்கங்கள் பற்றி அடிக்கடி விளக்குவார். இதனால் தாக்குறதாவர் இப்பூலகில் யாருமிலர். யாம்மட்டுமென்ன விதிவிலக்கா?

*'அவனின்றி அணுவும் அசையாது'*
*'வாழ்க தெல்லியூர் நடராஜன் நாமம்'*

*க.இராசரத்தினம்*
*ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்*
*அகில இலங்கை சமாதான நீதவான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடத்தில் ஓர் ஆசான்

திரு தெல்லியூர் நடராசா ஓர் ஆற்றல் மிக்க எழுத்தாளன். எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் தினசரி, வாரப் பத்திரிகைகளில் கடமையாற்றியதோடல்லாமல் "தமிழ் மணி", "சோதிடம்" போன்ற தனது சொந்தப் பத்திரிகைகளையும் வெளியிட்டவர்.

ஆங்கிலதமிழ் மொழிபெயர்ப்பாளராக அரசசேவையில் சேர்ந்து துறைமுக அதிகாரசபை, மீன்பிடி இலாகா, விவசாயத் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி "சிங்களம் படிக்க வேண்டும" என்று வந்த "சட்டம்" விரும்பாமல் ஓய்வு பெற்றார். கடமையாற்றும் போது பல்வேறு சமயங்களில் மொழிபெயர்ப்புத் திறனுக்காகப் பாராட்டுப்பெற்றவர். அரசசேவையில் இருந்தபோதும் எழுத்தார்வம் சற்றும் குறையாது தொடர்ந்து எழுதிவந்தார். சாரணியம் தொடர்பான பல நூல்களை உரிமை பெற்று மொழிபெயர்ப்பு செய்துள்ளார். சாரணியம்பற்றிய நூல் களைத் தாமும் எழுதியுள்ளார். ஆங்கில-தமிழ் தொழிநுட்பச் சொல்லகராதியும் எழுதியுள்ளார். இக்காலத்தில் சோதிடமும் கற்றுத் தேர்ச்சி கொண்டார்.

ஓய்வுபெற்ற பின் சோதிடத்தில் மிகவும் பிரபல்யமானார். பலரும் இவரிடம் பலன்கேட்டுப் பயனடைந்துள்ளனர். சிங்களவர் மற்றும் வெளிநாட்டினரும் இவரிடம் பலன்கேட்டுள்ளனர். தபால்மூலம் பலன்சொல்லல், கூறும்பலனை ஒலிப்பதிவு செய்து அனுப்புதல் போன்ற சேவைகளையும் செய்தார். வெளிநாட்டினரிடமும் பாராட்டும் பரிசில்களும் பெற்றவர். கைரேகை, வரும்நேரம், நினைத்த எண், நாள் பெயர், மாதப் பெயர் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் பலன் சொல்லவல்லார்.

"ஜோதிடம" மாத சஞ்சிகை நடாத்தியபோது நாட்டுநடப்பு எவ்விதம் அமையப் போகிறதென்பதையும் சாஸ்திரரீதியில் சிலசமயங்களில் குறிப்பிட்டெழுதுவார். முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபர் திரு சு.நடேசபிள்ளை அவர்கள் ஐ.தே.கட்சி அரசில் தபால் தந்தி அமைச்சராக விருந்த காலத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரமரணம்பற்றி ஏற்கனவே சாஸ்திரமூலம் தனது பத்திரிகையில் சூசகமாக எதிர்வுகூறி பலரையும் வியப்படைய வைத்தவர்.

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி யாகவிருந்த வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரனின் "நல்லைக் கந்தன் விழாக்காலத்தில் அவன் புகழ்மணக்கும் மலர் வெளியிட வேண்டும்" என்ற அபிலாசையைப் பூர்த்திசெய்யப் பெரிதும் உதவியவர். 1993இல் கௌரவ பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று "நல்லை குமரன்மலர" எனப்பெயரிட்டு மலரை வெளியிட்டு ஆறுவருடகாலம் கடமையாற்றி, அண்மையில் பத்தாவது ஆண்டும் மலர்ந்து மணம்வீசக் கண்டு மகிழ்ந்தார். "நல்லை குமரன்மலர்" இவர்நாமம் நினைவுறுத்தும்.

**அன்னார் நல்லைக் கந்தன் தாள்சேர, அவன்தாள் பணிவோமாக!**

*த.கனகசபை*
*காப்புறுதி முகவர்*
*ஓய்வுபெற்ற சிறாப்பர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து முல்லை

வெள்ளைக் கலையுடுத்தி என வெள்ளை வேட்டியும் வெள்ளை "நஸனலும்" உடுத்தி சபையின் நடுவில் வரும்போது சபைக்கே ஒரு பொலிவுண்டாகும். சூழ இருப்பவர்களையும் தன்வசம் கவரும் ஆகார்ஷ சக்தி இருப்பதைக் காணமுடியும். எதைப் பற்றியும் கதைக்கக் கூடிய புலமை அவரிடம் இருந்தது. அரசியலோ, ஆன்மீகமோ, சிறுகதையோ, சினிமாவோ, சமூகமோ, சோதிடமோ எது பற்றியும் எந்த வயதினருடனும் பேசும் ஒரு பக்குவம் இருந்தது.

சோதிடப்பேராசான் எனப் பேர்பெற்ற இவர் எண்சோதிடம், கைரேகை என்பவற்றையும் அறிந்திருந்தார். பலன்கேட்க வருபவர் படியேறும் நேரம் கருதிய்கலையையும் அறிந்திருந்தார். "செய்வன திருந்தச் செய்" என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். நடை, உடை, பாவனை எல்லாவற்றிலுமே செம்மை, பூரணம் இருப்பதைக் காணலாம். சோதிடம் பார்க்கும்போது, தான்கணித்துக் குறிப்பெழுதிய பின்தான் பலன் சொல்வார். கணிப்பிற்கு வெறுமனே பிறந்த தேதியையும், நேரத்தையும் கருதாது பிறந்த இடத்தையும் கருத்தில் கொள்வார். ஒரு குறித்த நேரத்தில் எங்கு பிறந்தாலும் ஒரே குறிப்புத்தான் என்றவாறு சிலர் கணிப்பார்கள். இவரது கணிப்பு வேறுவிதமானது. கணிப்பு விதிகளைப் பிறந்த இடத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கணிக்க வேண்டும் என்பதும் இவரது வாதமாகும். அதுவே சரியென்பது அவரது அனுபவ உண்மையுமாகும்.

தான்கொண்ட கருத்தை நிலை நிறுத்துவதில் தீரர். ஆதாரங்களை அங்கிங்கென்று திரட்டி அஞ்சா நெஞ்சுடன் தான் சரியெனக் கண்டதை நிறுத்தும் தீரமுடையவர். எல்லாவிற்கும் ஆதரமான அவரது ஞாபகசக்தி வியக்கத்தக்கது. இன்றும் 1947களில் என்னென்ன எழுதியதென எடுத்த எடுப்பில் சொல்வார். "He has a photographic memory" என அவர் அன்பர் ஒருவர் குறிப்பிட்டதைக் கேட்டேன். ஒரு குறிப்பை சில கணம் பாரத்தாலே போதும் -இன்ன கிரகம் இன்ன வீட்டில் இத்தனையாம் வீட்டில் என்பது படம் பிடித்த மாதிரிப் பதிந்துவிடும். இன்ன வீட்டு அதிபன், இன்ன அதிபன் வீட்டில் இருந்து, இத்தனையாம் வீட்டில் இருக்கும் இன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு அதிபனைப் பார்க்கிறான் என்று அவர் பார்க்காமல் சொல் வது சரிதானா என, குறிப்பைப் பார்த்துச் சரிபார்க்கவே எமக்கு சில நிமிடங்கள் எடுக்கும்.

"தாயே கோயில், தந்தையே மந்திரம்" என்பது இவரது தாரக மந்திரம். தாய்மீது அதீத பக்தி கொண்டவர். விளையாட்டிற்குத் தன்னும் தாயை யாரும் குறைசொல்லக் கேட்கார். "என்னப்பா எல்லாருக்கும் அம்மா இருக்கிறா தானே" என்று பிள்ளைகள் விளையாட்டாய் சீண்டுவதைக் கூடப் பொறுக்கமாட்டார். தாய் மீது கொண்ட அவரது இந்த பக்திதான் அவரது வெற்றிக்குக் காரணம் என இவரையறிந்த பெரியவர் ஒருவர் குறிப்பிட்டார். தாயெனும் தெய்வீக சக்தி, அவர் உள்ளுணர்வாய் இருந்து வழிகாட்டும் என்பது அப்பெரியார் சொன்ன கருத்தாகும்.

அன்னை தந்த ஆற்றலினால் படித்தறிவு, பட்டறிவு கொண்டு கருத்தாழமிக்க கதை, கட்டுரைகளை கதியில் எழுதும் வல்லமை கைவரப் பெற்றவர். அத்துடன் கவிதை புனைவதிலும் புலமை யுடையவர். பாரதியார் பாங்கில் புதுக் கவிதை வடிவில் மட்டு மல்லாது, வெண்பா, அகவல், அறுசீர்விருத்தம் என மரபுவழி நெறி களுக்கமைந்த வடிவிலும் பாவடிக்கும் திறன் பெற்றிருந்தார். "அ"கர முதலாகி "ன"கர இறுதியாய் வரும் "அன்னை" க்குள்ளே எழுத்தெல்லாம் அடங்கியதே யென்றெண்ணி வியப்பார்.

மென்மையான உள்ளம் கொண்டவர். சகோதரன் மீதும் சகோதரிகள் மீதும் அவர்தம் பிள்ளைகள் மீதும் மதிப்பும் பாச முடையவர். காதல் மிக்கநல் கணவன் அவர். "ஆச்சி", "பிள்ளை" என்றே மனையாளை அழைப்பார். அன்புமிக்க தந்தை அவர். பாசம் மிகுந்த பேரன் அவர். பாதுகாப்புணர்ச்சி சற்று அதிக மாகவே உள்ளவர். பொழுது சாய்ந்துவிட்டால் எல்லோரும் வீட்டில் நிற்கவேண்டும் என்பது அவரது நியாயமான கட்டளை. வாயில் படலை பூட்டியபின் உறங்கினால்தான் அவருக்கு உறக்கம் வரும். வளவுக்குள் எந்த மூலையில் எச்சிறு அசைவு ஏற்பட்டாலும் அவர் காதிற்கு அது கேட்டுவிடும். பேரப்பிள்ளைகளின் சுத்தம் பேணுவதிலும், அவர்களின் பாது காப்பிலும் மிகுந்த கரிசனை உள்ளவர். நாலுவயதுப் பேரன் என்றாலும் சரி, நாற்பது வயதுப் பிள்ளைகள் என்றாலும் சரி அவரது கரிசனை ஒரே மாதிரியாகத்தானிருக்கும். பிள்ளைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரர்களை "ஆச்சி", "அப்பு" என்றே குறிப்பிடுவார். அவர்கள் முன்னேற்றத்தில் மிகுந்த சிரத்தை கொண்டுழைத்தவர். குணமுள்ள இடத்தில் கோபமிருக்கும் என்பார்கள். சமயத்தில் கோப்படுவார். சற்றுச் சிந்துத்துப் பார்த்தால் அவர் கோபத்தில் சுயநலமிருக்காது. பொதுநலம், பொதுக்கட்டுக்கோப்பு இருப்பதை உணரமுடியும்.

எதிலும் அவதானமுள்ளவர் எழுபத்தொன்பதாவது வயதிலும் சதாவதானியாக எல்லவாற்றையும் கரிசனையுடன் அவதானிப்பார். யார் வருகிறார் போகிறார், பேரன் எதில் ஏறுகிறான் இறங்குகிறான் என்பவற்றில் மட்டுமல்ல நாட்டு நடப்பிலும் கடைசி வரை அக்கறை கொண்டிருந்தார். காலை பத்திரிகை வந்ததுமே பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பிருக்கும். அவ்வாறே புதினங்களையும் கடுகதியில் வாசித்துவிடுவார். "சும்மா நுனிப்புல் மேய்ந்தாரோ" என நாம் நினைத்தால் என்ன புதினம் என்று விரிவாகவே சொல்வார். சொல்லேருழவன் என்றபெயர் அதனால் தானோ என எண்ணத் தோன்றும். தொலைக்காட்சியில் இன்ன சனலில் இத்தனை மணிக்கு செய்தி என்பது அவருக்குத் தெரியும். பிள்ளைகள், பேரர்கள் வேறு சனல் பார்த்துக் கொண்டிருந்தாலும் அதைமாற்றி செய்தி கேட்டால்தான் அவருக்கு நிம்மதி. பத்திரிகையுலகில் இருந்தவர் என்ற ரீதியில் நாட்டு நடப்பு பற்றிய அவரது ஆர்வம் கடைசிவரை குன்றாதிருந்தது.

எஸ்.எஸ்.சி பரீட்சையில் திறமை சித்தியடைந்த இவரை மேற்படிப்புத் தொடரமுடியாது குடும்பநிலை தடுத்துவிட உத்தியோகம் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சிரமம் எதுவுமின்றி உத்தியோகம் கிடைத்தாலும், தாயாரின் பணிப்பிலும் அவரது இயல்பான ஆற்றலாலும் எழுத்துத்துறையில் அதிகம் ஆர்வம் செலுத்தினார். பாடசாலையில் கையேட்டுப் பிரதி நடாத்திய அனுபவமோ என்னவோ 1947இல் தனது இருபத்திநான்காவது வயதில் "தமிழன் மாட்சி" எனும் நூலை எழுதி கொழும்பு இளைஞன் பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளார். இருபத்திநாலு வயது இளைஞன் எழுதிய இந்நூலைப் படிப்பவர்கள் அவரது எழுத்தாற்றலைப் புரிந்துகொள்வர் என்பது திண்ணம். மாணவனாக இருந்த காலத்தில் மிகவும் சுறுசுறுப்பான மாணவனாகத் திளைத்தவர். அண்மையில் சந்தித்த இவரது பால்ய நண்பர்--



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர்-- இவர்பற்றிக் குறிப்பிடுகையில், "இவரை எல்லோரும 'Hurry up Nadarajah' என்றே அழைப்போம்" என்று சொன்னார். விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவரது சுறுசுறுப்பு கடைசிவரை அவரைவிட்டு நீங்கவில்லை என்றால் சாலவும் பொருந்தும்.

பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதிய இவர் இன்னும் எழுதவேண்டும் வெளியிடவேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்தார். "ஔவைக் குறளை" நற்பொழிப்புடன் வெளியிடவேண்டும் என்பது அவரது அவாக்களில் ஒன்று. அதற்கான பூர்வாங்க ஏற்பாட்டையும் செய்திருந்தார். உடல்நிலை காரணமாக நிறைவேறாமற்போன அவரது ஆக்கபூர்வமான எண்ணங்களை நிறைவேற்ற அவருடைய மனைவியும் மக்களும் விழைந்துள்ளனர். அதன் ஒரு அம்சமாக, ஔவைக் குறளைப் பொழிப்புடன் இம்மலரில் வெளியிட ஆவன செய்துள்ளனர். பல்துறை சார்ந்த அறிவுக்களஞ்சியமாக இருந்த அவரிடமிருந்து கற்க வேண்டிய, அறியவேண்டிய, தெளிய வேண்டிய பல விடயங்கள் இருந்தும், அருகிருந்தே அதைப் பெறாமல் விட்டோமே என்ற ஆதங்கம் தீராத ஆதங்கமாய் ஆகிவிட்டது.

முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை என்பார். வெள்ளை நிறத்து முல்லை முற்றம் பொலிந்திருக்க அதுதரு நறுமணம் எங்கும் நிறைந்திருக்கும். பொலிவின் எழிலையும், நறுமணத்தின் ஆகார் சத்தையும் அறிந்த புலன்களுக்கு அதுவே இயல்பானதானவுடன் முல்லை மறந்துபோய்விடுகிறதோ என்னமோ. கொடி மடிந்து விட்டால் சோபை இழந்து போன முற்றம் முல்லையின் மகத்துவம் சொல்லுமே. வெள்ளை வெளேரெனப் பொலிவாய் மணம்பரப்பிய முல்லை சாய்ந்ததுமே "வேல் அகம்" இன்று சோபை இழந்து விட்டதையே.

இன்னருமை மைந்தனாய்
மேன்மைபெறு மாணவனாய்
ஆதார நேச சோதரனாய்
காதல் சொன்ன கணவனாய்
அன்பான அருந் தந்தையாய்
மாண்புமிக்க அம்மானாய்
ஆசைமிகு அம்மப்பாவாய்
இசைபட வாழ்ந்த இன்
சொல்லே ருழவன் நல்
சோதிடப் பேராசான் அருஞ்
சோதியுட் சோதியானார்.

--*மருமகன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைக்குறள்

## வீட்டுநெறிப்பால்

### அதிகாரம் 1: உடம்பின்கூறு

1. ஆதியாய் நிற்கு மறிவு முதலெழுத்
   தோதிய நூலின் பயன்.

எமது சரீரத்திற்கு மூலமாயுள்ள அறிவானது, "ஓம்" எனும் முதலெழுத்தை கூறிய இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் எனும் நான்கு வேதங்களின் பயனாகும்.

2. பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
   தரமாறிற் றோன்றும் பிறப்பு.

பரம்பொருளான சிவத்தின் கிரியா சக்தியினுள் அடங்கிய ஐம்பெரும் பூதங்களான மண், நீர், தீ, காற்று, விண் என்பன ஒன்றுடன் ஒன்று ஏற்ற அளவில் மாறுபட்டுக் கலந்தால் பிறப்பு உண்டாகும்.

3. ஓசை பரிச முருவஞ் சுவை நாற்ற
   மாசை படுத்து மனம்.

ஐம்புலன்களான செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பவற்றால் உணரப்படும் சத்தம், ஸ்பரிசம், காணும் காட்சி, நாவின் சுவை, மணம் எனும் தன்மாத்திரைகள் ஐந்தும் மனத்தில் ஆசையினை உருவாக்கும்..

4. தருமம் பொருள்காமம் வீடெனு நான்கு
   முருவத்தா லாய பயன்.

அறம், பொருள், இன்பம், வீடு(மோட்சம்) என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் முறையே அடைவதே பிறந்ததினால் கிடைத்த பலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்று
மொலியிரண் டொன்றாகும் விண்.

மண்ணானது வெட்டும் போது ஓசை எழுப்பியும், தொட்டு உணரக்கூடியதும், பார்க்கக்கூடியதும், நீர் பிறபொருட்களின் சேர்க்கையினால் நாற்றம் கொடுக்கக்கூடியதுமான ஐந்து தன்மாத்திரைகளையும், நீரானது ஊற்றும் போது ஓசை எழுப்பியும், தொட்டு உணரக்கூடியதும், பார்க்ககூடியது, சுவைக்கக்கூடியதுமான நான்கு தன்மாத்திரைகளையும், நெருப்பானது பிறபொருட்களை எரிக்கும்போது வெடித்து ஓசை எழுப்பியும், உணரக்கூடியதும், பார்க்கக் கூடியதுமான மூன்று தன்மாத்திரைகளையும், காற்றானது வீசும்போது ஓசை எழுப்பியும், உடலில்படும்போது ஸ்பரிச உணர்ச்சியும் கொடுக்கக்கூடியதுமான இரண்டு தன்மாத்திரைகளையும், விண்ணானது இடி முதலியவற்றால் உண்டாகும் ஓசைமட்டும் எழுப்பும் ஒரு தன்மாத்திரையையும் கொண்டன.

6. மாயன் பிரம னுருத்திர னீசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து.

விஷ்ணு, பிரமன், உருத்திரன், மகேசன், சாஸ்திரங்கள் ஆராய்கின்ற சதாசிவனும் சேர்த்து மூர்த்திகள் ஐவர். இவர்களே பஞ்ச மூர்த்திகளாவர்.

7. மாலய னங்கி யிரவி மதியுமையோ
டாலுஞ் சிவசக்தி யாறு.

விஷ்ணு, பிரமன், அக்கினி, சூரியன், சந்திரன், உமை இவை ஆறும் சிவசக்திகள் ஆகும்.

8. உதிரந்தோன் மூளை நிணமென்பு சுக்கிலம்
விதிரச் சுவைதாது வேழு.

இரத்தம், தோல், மூளை, இறைச்சி, எலும்பு, சுக்கிலம் ஆகிய ஏழும் தாதுக்களாகும்.

9. மண்ணோடுநீ ரங்கி மதியோடு காற்றிரவி
விண்ணுஞ் சதாசிவத்தோ டெட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண், நீர், அக்கினி, சந்திரன், காற்று, சூரியன், ஆகாயம், சிவத்தோடு இயமானன் ஆக கணங்கள் எட்டு ஆகும்.

10. இவை யொல்லாங் கூடி யுடம்பாவ தன்றி
யமையவித் தாகுமாம் விந்து.

மேற்கூறியவையான பஞ்சபூதங்கள், ஐங்கரணங்கள், பஞ்சமூர்த்திகள், சிவசத்திகள், தாதுக்கள் கணங்கள் என்பனவற்றின் துணையோடு உடல் உண்டாவதற்கு வித்தாக அமைந்தது விந்து.

## அதிகாரம் 2: உடம்பின் பயன்

11. உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்.

1

தேகத்தினுள்ளேயுள்ள உத்தமனாகிய சதாசிவத்தை அறிதல் தான் தேகத்தை அடைந்த பயனாகும்.

12. உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாந்
திடம்பட வீசனைத் தேடு.

உடம்பெடுத்ததின் பயன் சதாசிவனை ஆராய்ந்து அறிதலாம்.

13. உறுபய னாவ துடம்பின் பயனே
தருபதஞ் சங்கரனைச் சார்.

நல்ல பதவிகளை தரத்தக்க சங்கரனை சார்தலே முன்செய்த வினையின் பயனாக கிடைத்த தேகத்தினால் பெறத்தக்க பயனாகும்.

14. பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாந்
துறப்பதாந் தூநெறிக்கட் சென்று.

உயர்ந்த உத்தம மார்க்கத்தில் ஒழுகி சகல தீயவைகளையும் விட்டொழிவதே பிறப்பினால் பெற்ற பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உணர்வாவ தெல்லா முடம்பின்பயனே
யுணர்வினா லுத்தமனைக் காண்.

சரீரத்தினால் தான் உணர்ச்சியுண்டாகும். அவ்விதம் பெறும் உணர்வைக் கொண்டு உத்தமனாகிய இறைவனைக் காண வேண்டும்.

16. உடம்பினா லன்றி யுணர்வுகளில்லை
யுடம்பினி லுன்னியதே யாம்.

உடம்பில் தான் ஐம்புலன்களால் உணர்கின்ற உணர்வுகள் உண்டு. புலன் அறிவுகள் தேகத்தின் உறுப்புக்களால் வெளிப்படுவன அன்றி தனித்துக் காட்டுதல் முடியாது.

17. மாசற்ற கொள்கை மனத்தி லடக்கினா
லீசனைக காட்டு முடம்பு.

குற்றமற்ற தியானத்தை மேற்கொண்டால் சரீரமே இறைவனை உணர்த்தும்.

18. ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கு
நேசத்தா லாய வுடம்பு.

பந்த பாசத்தின் பயனாக உருவாகிய உடம்பு, ஓசை முதலிய பஞ்ச புலன்களையும் உணரச் செய்யும்.

19. உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
யயிர்ப்பின்றி யாதியை நாடு.

ஆன்மாவிற்கு நிலைபெற்ற பலனாக இருப்பவை யாவும் உடம்பினுள் அடங்கிய தத்துவமேயாதலால், இவ்வுடம்பைக் கொண்டு மூலமாகிய கடவுளை தேடுதல் வேண்டும்.

20. அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்.

அன்னத்தினால் உருவாகிய உடம்பினால் பெறும் பயனெல்லாம் முதல்வனாகிய கடவுளை அதன்னுள்ளே நின்று காட்டலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 3: உள்ளுடம்பின் நிலைமை

21. கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா
முற்றுடமபா லாய பயன்.

முழுமையான சூக்குமதேகத்தினால் உண்டான அறிவின் ஆற்றலால் ஆசிரியரின் மூலமின்றி தானே கற்பதற்கும், கேட்பதற்கும், கண்ணால் பார்ப்பதற்கும் முடியும்.

22. சென்றுண்டு வாழ்ந்து திரிதரு முள்ளுடம்
பென்றும் கெடாத திது.

சூக்குமசரீரமானது வினைவசத்தால் சடசரீரத்தினுள் சென்று வினைப்பயனிற்கேற்ப வாழ்ந்து பலபிறவிகள் தோறும் மாறிமாறி சஞ்சரிக்கும் என்றாலும் சூக்கும உடல் என்றும் அழியாது.

23. வெள்ளிபொன் மேனிய தொக்கும் விளைவுடைய
வுள்ளிடம் பாய வொளி.

நன்மையை விளைவிக்கும் சூக்கும சரீரத்தின் ஒளியானது வெள்ளி பொன்னினாளான உருவத்தை ஒத்திருக்கும்.

24. நல்வினையுந் தீவினையு நின்று தெரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு.

சூக்கும சரீரமானது நல்வினை தீவினைகளை அனுபவித்து இது செய்யத்தகும், இது தகாது என அறிவுறுத்துவதும் அன்றி அவ்வறிவிற்கு ஏற்றபடி செய்வதற்கும் மூல காரணமாகும்.

25. அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு.

முற்பிறப்பில் செய்த நன்மை தீமைகளின் தொடர்ச்சியை நன்கு அனுபவித்து கழித்தல், துன்பத்தையே தரும் பிறவியை விட்டு சூக்கும் சரீரம் நீக்கும்.

26. உள்ளுடம்பின் வாழு மொன்பது வாயுவுங்
கள்ளுடம் பாக்கி விடும்.

உள்ளுடம்பிலே இருக்கும் ஒன்பது வகையான வாயுக்களும், சுத்தமான சூக்கும உடலை ஞானநெறிக்கு மாறுபட்ட திருட்டு உடம்பாக்கி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பொய்க்கெல்லாம் பாசனமாய்ப் புள்ளுவக்கோர் வித்தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு.

சரீரத்தினுள் அடங்கியிருக்கும் சூக்கும உடம்பு நிலையற்ற ஆசாபாசங்களுக்கு உட்பட்டு வஞ்சனைகட்கு ஒரு காரணமாய் அமைந்து விடும்.

28. வருபய னுண்டு மகிழ்ந்துடனா நிற்கு
மொருபயனைக் காட்டு முடம்பு.

பிறப்பின் கன்ம பலன்களை கழித்து மகிழ்ச்சியுடன் தோன்றுகின்ற நிகரற்ற சிவயோக நிலையை சூக்கும சரீரம் காட்டும்.

29. வாயுவினா லாய வுடம்பின் பயனே
யாயுவி னெல்லை யது.

வாயுக்களானது விந்துவுடன் எந்த அளவு கலந்து உடம்பு தோன்றுகின்றதோ அந்த அளவு வாழ்நாளின் (ஆயுளின்) எல்லையைக் குறிக்கும்.

30. ஒன்பது வாசலு மொக்க வடைத்தக்கா
லன்பதி லொன்றா மரன்.

ஒன்பது துவாரங்களையும் ஒன்றாக அடைத்து யோகம (பிராணயாமம்) செய்வோரின் அன்பில் சிவன் கலந்திருப்பான்.

## அதிகாரம் 4: நாடி தாரணை

31. எழுபத்தீ ராயிர நாடி யவற்றுண்
முழுபத்து நாடி முதல்

உடலில் உள்ள எழுபத்திரண்டாயிரம் நாடி வகைகளில் அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, குரு, அக்கினி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருடன் என்னும் பத்து நாடிகளே முதன்மையானவையாகும்.

32. மெய்யெல்லா மாக நரம்போ டெலும்பிசைந்து
பொய்யில்லா நாடிப் புணர்வு

சரீரம் முழுவதும் நரம்பும் எலும்பும் பொருந்தியிருக்கும் நிலையே தவறாத நாடிகளின் பிணைப்பின் தன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. நரம்பெனு நாடி யவற்றினுக் கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு.

நரம்பென்று சொல்லப்பட்ட நாடிகளுக்கெல்லாம் பலம்பொருந்திய நாடி ஒன்று உள்ளது.

34. உந்தி நடுவா யுறுமுடியிற் கீழ்மேலும்
பந்தித்து நிற்கும் பரந்து.

தொப்புழை நடுவாக கொண்டு தலையிலிருந்து கீழும் மேலுமாகவும் பக்கங்களிலும் வியாபித்து நாடிகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்கும் நிலையையுடையது.

35. உந்தி முதலாகி யோங்காரத் துப்பொருளாய்
நின்றது நாடி நிலை.

சரீரத்தினுள் நாடிகளின் நிலையானது கொப்புழ் முதல் ஓங்காரம் வரை ஆதார ஸதானமாகின்றது.

36. காலொடு கையி னடுவிடைத் தாமரை
நூலளவு நாடி நுழைந்து.

நரம்பானது கால், கை, நடு இடங்களிலும் தாமரை நூல்போல் ஊடே புகுந்து நிற்கும்.

37. ஆதித்தன் சந்திரன் போலவந் நாடிகள்
பேதித்துத் தாம்பரந்த வாறு.

சூரிய சந்திரா் போல் நரம்புகள் தமக்குள் மாறுபட்டும் பரந்தும் நிற்கின்றன.

38. நாடிக ளூடுபோய்ப் புக்கு நலஞ்சுடர்தான்
வீடு தருமால் விரைந்து.

நரம்புகளின் வழியே புகம் நன்மை தரும் ஒழியானது விரைவில் மோட்சத்தைக் கொடுக்கும்.

39. நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிகளின் இயல்பறிந்து அவற்றுடன் இசைந்து நீண்ட ஒளியாகிய சிவத்தை காண்பதே அறிவாகும்.

40. அறிந்தடங்கி நிற்குமிந் நாடிக டோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

பூரண நிலையறிந்து சரீர பந்தத்தில் கட்டுப்பட்டு இருக்கும் நாடிகளிலெல்லாம் கடவுள் வெளிப்படையாகக் காண முடியாதவாறு நிறைந்து இருக்கிறார்.

## அதிகாரம் 5 : வாயு தாரணை

41. மூலத்திற் றோன்றி முடியிலிடு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண்.

நாம் சுவாசிக்கும் காற்றானது வாயுவிற்கு மூலமாகிய சுவாதிட்டானத்தில் தோன்றி சிரசிற்கு செல்லும்போது எட்டங்குலமாகவும் அங்கிருந்து வெளியேறும் போது பன்னிரண்டங்குல சுவாசமாகவும் அமையும்.

42. மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்ற வாயு
வுயிர்ப்பின்றி யுள்ளே பரந்து

உட்சுவாசிக்கும் காற்றானது உடனே வெளிச்சுவாசம் செய்யாது தேகத்தின் ஒவ்வோர் அணுவின் வழியில் எல்லாம் ஊடுருவிச் செல்லுமாறு அடக்கிப் பரவுதல் வேண்டும்.

43 இரேசித்து நிற்பதுபோற் பூரித்து நிற்கத்
தராசுமுனை நாக்கது வே.

காற்றினை வெளிப்படுத்துவதைப் போல் உள்ளிழுப்பதும் அளவிலும், காலநீட்சியிலும் ஒரே தன்மையானதாய் இருப்பின் தராசின் தாலம் போலிருக்கும்.

44. கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தானோக்கிற்
றும்பிபோ னிற்குந் தொடர்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை சிந்தனை செய்து சுவாசத்தை அடக்கி தரிசித்தால் அவ்வாயுவானது யானை போல் அசையாதிருக்கும்.

45. இரேசக பூரக கும்பக மாற்றின்
றராசுபோ னிற்குந் தலை.

உட்சுவாசம், வெளிச்சுவாசம், இவற்றிற்கிடையில் சுவாசத்தை அடக்குதல் போன்றவற்றை முறையாகச் செய்யின் தராசின் முனை போல் தலைவனாகிய ஈசன் நிற்பான்.

46. இடைபிங் கலைக ளிரேசக மத்தி
லடைய லவன்றாளே யாம்.

இடது நாசியாலும், வலது நாசியாலும் மாறிமாறி சுவாசித்தால் சிவனுடைய திருவருளை அடையலாம்.

47. அங்குறியான் முட்டி முறையா லிரேசிக்கப்
போங்குமாம் பூரகத்தி னுள்.

விரல்களினால் மூடி முறையாக வெளிச்சுவாசம் செய்யின் உட்சுவாசமாகிய பிரணவத்தின் ஆனந்தம் பெருகும்.

48. வாயு வழக்க மறிந்து செறிந் தடங்கி
லாயுட் பெருக்கமுண் டாம்.

வாயுக்களின் இயல்பையறிந்து சுவாசத்தை அடக்கப் பழகினால் ஆயுள் விருத்தி உண்டாகும்.

49. எண்ணிலி யூழி யுடம்பா யிரேசிக்கி
லுண்ணிலைமை பெற்ற துணர்வு.

பலகாலம் உடம்பை ஆய்ந்து வெளிச்சுவாசம் செய்தால் உணர்ச்சியானது உள்நிலையைப் பெற்றதாகும். அதாவது சரீரம் உறுதியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. போகின்ற வாயு பொருந்திற் சிவமுள்ளே
யேகின்ற வாயுசத்தி யெண்.

முறைப்படி வெளிச்சுவாசிக்கின்ற காற்றானது சிவனும், உட்சுவாசிக்கின்ற காற்றானது சக்தியும் ஆகும்

## அதிகாரம் 6: அங்கிதாரணை

51. அந்தரத் திலங்கு மழல்போலத் தானோக்கிற்
பந்த மலமறுக்க லாம்.

ஓர் ஆன்மா ஆகாயத்திலேயுள்ள நெருப்புச் சுடரான சூரியனைப் போல் மூலாக்கினியையும் இயங்கினால் பிறப்பு, இறப்பு என்னும் பாசங்களையும் மும்மலங்களையும் அறுக்கலாம்.

52. எரியுந் தழல்போல வுள்ளுற நோக்கி
லரியு மழலுருவ மாம்.

எரிகின்ற நெருப்பினுள்ளே நிட்டை நிலையில் நோக்கின் அரியும் சிவமும் பேதமற தோன்றும்.

53. உள்ளங்கி தன்னைப் பொருந்தக் கொழுவூறில்
வெள்ளங்கி தானாம் விரைந்து.

சுவாதிட்டானத்து அக்கினியை சுழுமுனை நாடியிற் பொருத்த வைத்தால் சந்திர கலையாக மாறும்.

54. உந்தியி னுள்ளே யொடுங்கச் சுடர்பாய்ச்சி
லந்தி யழலுருவ மாம்.

மூலாதாரத்தில் ஏகமாக அக்கினியைப் பாய்ச்சினால் சரீரம் மாலைச் சந்திரனைப் போல் நெருப்பின் வடிவமாகும்

55. உள்ளும் புறம்பு மொருங்கக் கொளுமறிவிற்
கள்ள மலமறுக்க லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தையும் புறத்தையும் ஒரேமாதிரிப் பார்க்கக்கூடிய அறிவு உருவாகுமானால் கள்ளத்தனமாக வரும் மும்மலங்களையும் ஒழுக்கலாம்.

**56. உள்ளத்தா லங்கி யொருங்கக் கொளுமறிவின்
மெள்ளத்தான் விடாம் விரைந்து.**

மனத்தில் மூலாக்கினியை ஒருங்கச் செய்கின்ற பேரறிவினால் நிச்சயமாக வினாவில் பந்தங்களினின்றும் விடுதலை பெற்று மோன நிலையை அடையலாம்.

**57. ஐயைந்து மாய வகத்தி லொளிநோக்கின்
பொய்யைந்தும் போகும்புறம்**

இருபத்தைந்து தத்துவங்களும் அடங்கிய சரீரத்தின் உள்ளிடம் முழுவதும் மூலாக்கினியின் மூலம் பார்த்தால் பொய்மையான ஐம்பொருள்களும் வெளிச் சென்றுவிடும்.

**58. ஐம்பது மொன்று மழல்போலத் தானோக்கி
லும்ப ரொளியாய் விடும்.**

ஐம்பதியொரு அட்சரங்களையும் அக்கினி சொருபமாக ஆன்மா நோக்குமானால் தெய்வ ஒளியுடைய நிலையை அடையலாம்.

**59. தூண்டுஞ் சுடர்போற் றுலக்க முறநோக்கில்
வேண்டும் பொருண் முடிக்கலாம்**

தூண்டப்படுகின்ற ஞானச்சுடரை விளக்கமாக நோக்கின் விரும்பிய விடையங்களில் சித்தியடையலாம்.

**60. ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு.**

மிகவும் பிரகாசமான குண்டலிச் சுடரை உற்று நோக்கினால் மாலைப் பொழுதில் விளக்கைப் போல் பிரகாசிக்கின்ற சந்திரனைப் போன்றிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 7 : அமுத தாரணை

61. அண்ணுக்குத் தன்னை யடைத்தங் கமுதுண்ணில்
விண்ணோர்க்கு வேந்தாய் விடும்.

உச்சியிலுள்ள அமுதை யோகக்தீயால் உருக்கி அமுதுண்டால் தேவர்களுக்கு அதிபதியாகலாம்.

62. ஓங்கார மான கலசத் தமுதுண்ணிற்
போங்கால மில்லை புரிந்து.

பிரணவத்தன்மை பொருந்திய கலசத்திலுள்ள அமுதத்தை விரும்பி உண்டால் இறக்கும் காலம் வருவதில்லையாம்.

63. ஈரெண்கலையி னிறைந்தங் கமுதுண்ணிற்
பூரணமாய் நிற்கும் பொலிந்து.

பதினாறு கலைகளும் பூரணமாயிருக்கும் அமுதத்தை யுண்டால் அழகுமிக்க பரிபூரண நிலையை அடையலாம்.

64. ஆனகலசத் தமுதை யறிந் துண்ணின்
ஞான மதுவா நயந்து.

பொருந்திய கலசத்தில் உண்டான அமுதத்தை) அறிவால் உணர்ந்து உண்ணும் போது அதுவே பேரறிவாகும்.

65. ஞான வொளிவிளக்கா னல்ல வமுதுண்ணி
லான சிவயோகி யாம்.

அறிவென்னும் ஒளிவீசும் விளக்கடியிலிருந்து நன்மை தரும் அமுதத்தைப் புசித்தால் சிறப்பு பொருந்திய சிவ யோகியாகலாம்

66. மேலை யமுதை விலங்காமற் றானுண்ணிற்
காலனை வஞ்சிக்க லாம்.

சிரசில் விளைந்து வருகின்ற அமுதத்தை விலக்காமல் உண்டால் எமபயமின்றி சிரஞ்சீவியாகியிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. காலை தலையந்தி கலந்த வமுதுண்ணின்
ஞான மதுவாய்மை யாம்.

காலை, உச்சி, மாலை என்ற மூன்று பொழுதிலிலும் மூலாக்கினியிற் கலந்த அமிர்தத்தை உண்டால் பேரறிவானது சித்திப்பது உண்மையாகும்

68. நிலாமண் டபத்தி னிறைந்தவமு துண்ணி
லுலாவலா மந்திரத்தி னூடு.

சந்திரமண்டலத்தில் நிறைந்தருக்கும் அமிர்தத்தை உண்டால் ஆகாயமார்க்கமாக சஞ்சரிக்கலாம்.

69. ஊறு மமுதத்தை யுண்டாங் குறப்பார்க்கின்
மாறும் பிறப்பறுக்க லாம்.

சுரக்கும் அமிர்தத்தை உண்டாகும் தருணத்திலேயே உண்பவனை பிறப்பு இல்லாதபடி அழித்து விடலாம்.

70. எல்லையி லின்னமு துண்டங் கினிதிருக்கிற்
றொல்லை முதலொளியே யாம்.

அளவு சொல்ல இயலாத இனிய அமிர்தத்தை உண்டு அவ்விடத்திலே இன்புற்றிருந்தால் பழமையான முதல்வன் பிரகாசமே கிட்டுவதாகும்.

## அதிகாரம் 8 : அர்ச்சனை

71. மண்டலங்கண் மூன்று மருவ வுடனிருத்தி
யண்டரனை யர்ச்சிக்கு மாறு.

சூரிய, சந்திர, அக்கினி என்னும் மூன்று மண்டலங்களும் ஒன்றுடன் ஒன்று சேர உடன் இருத்தி நெருங்கியுள்ள சதாசிவனை அர்ச்சனை செய்யும் வழியே பொருந்துவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72 ஆசனங் கட்டி யான் றன்னை யர்ச்சித்துப்
பூசனை செய்கவதன் பின்.

ஆசனங்களை அமைத்துக் கொண்டு சதாசிவனை அர்ச்சனை செய்த பின்னர் அவ்வுருவத்தினை மனத்தினுள்ளே கலப்பிப்பாயாக.

73. உள்ளமே பீட முணர்வே சிவலிங்கந்
தெள்ளிய யர்ச்சிக்கு மாறு.

தெளிந்த அறிவை உடையவர்கள் மனத்தை பீடமாகவும் உணர்ச்சியை சிவலிங்கமாகவும் பாராட்டி அர்ச்சனை செய்வார்கள்..

74. ஆதாரத்துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமன்றி யர்ச்சிக்கு மாறு.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களினுள்ளேயும் சிவன் அடங்கி இருப்பதை உணர்ந்து, அவ்வுருவை பதி, பசு என்ற நிலை விலக்கி வழிபடல் வேண்டும்.

75. பூரித் தீருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு.

பூரகஞ் செய்து கலந்த சிவனுடைய சொரூபத்தை அவ்வீடத்தில் பொருத்தி அர்ச்சிக்க வேண்டும்.

76. விளங்கிய சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு
துளங்கின்றி யர்ச்சிக்கு மாறு.

அறிவினால் பகுக்கும் பண்பு பெற்ற மனத்தை உடையவர் உண்மைப் பொருளாகிய சதாசிவனைக் கண்டு மனச்சலனம் இல்லாமல் அர்ச்சிக்க வேண்டும்.

77. பிண்டத்தி னுள்ளே மற் பேரா திறைவனைக்
கண்டுதா னர்ச்சிக்கு மாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரத்தினுள்ளே பிரியாத சிவனை கண்டறிந்து அர்ச்சிக்க வேண்டும்.

**78. போரக் கருத்தினாற் பிண்டத்தி னுண்ணினைந்
தாரா தனைசெய்யு மாறு.**

சரீரத்தினுள் இருக்கும் மாறுபடாத மனத்தோடு சிவனை ஆராதிக்க வேண்டும்.

**79. மந்திரங்க ளெல்லா மயங்காம லுண்ணினைந்
துய்ந்தரனை யர்ச்சிக்கு மாறு.**

எல்லா மந்திரங்களையும் மயக்கமற நினைத்து அகத்தினுள்ளே சிவனை நினைந்து இருத்தி அர்ச்சிக்க வேண்டும்.

**80. உள்ளத்தி லுள்ளே யுறப்பார்த்தங் கொண்சுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு.**

மனத்தினுள்ளே தோன்றுகின்ற பிரகாசமாகிய ஞானச் சுடரை அர்ச்சிக்க வேண்டும்.

## அதிகாரம் 9 :உள்ளுணர்தல்

**81. எண்ணிலி கோடித் தவஞ்செய்தீங் கீசனை
யுண்ணிலைமை பெற்ற துணர்வு.**

எண்ணிக்கையில்லாத கோடிக்கணக்கான தவங்கள் செய்து இப்பிறவியிலேயே சதாசிவனை மனவலுவால் அடையப் பெற்றது உணர்வாகும்.

**82. பல்லூழிக் காலம் பயின்றானைப் பூசித்து
நல்லுணர்வு பெற்ற நலம்.**

பல யுகாந்தமாக சாதனை முறையில் ஈடுபட்டு சதாசிவ மூர்த்தியை பூசித்து பெற்ற பயனாவது நல்ல உணர்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. எண்ணற் கரிய வருந்தவத்தி னாலன்றே
நண்ணப் பெறுமுணர்வு தான்.

மனத்தினால் எண்ணுவதற்கு அரிய கடினமான தவ ஒழுக்கத்தினால் அடைவது நல்ல உணர்வாகும்..

84. காயக் கிலேச மறையப் பயனன்றே
யோயா வுணர்வு பெறின்.

தேகத்திலான சஞ்சல நிகழ்ச்சிகளை தெரிந்து கொண்டதன் பயன், அழியாத இந்த உணர்ச்சியைப் பெற்றதாகும

85. காடு மலையுங் கருதித் தவஞ்செய்தாற்
கூடு முணர்வின் பயன்.

உடலில் பரவியுள்ள ஞானப்பெருக்கையும், மலைபோல் உயர்ந்துள்ள ஆறு ஆதாரங்களின் முடிவாகிய உச்சியையும் மனதில் சிந்தித்து தவம் செய்தால் உணர்வின் பலனான சிவக் கலப்பு சித்திக்கும்.

86. பண்டைப் பிறப்பின் பயனாந் தவத்தினாற்
கண்டங் குணர்வு பெறின்.

தவம் செய்ததனால் சதாசிவனின் நிலைகண்டு நல்லுணர்வு பெறுவது இதற்கு முன் எடுத்த பிறவிகளிற் செய்த நற்கருமத்தின் பயன் ஆகும்.

87. முன்னைப் பிறப்பின் முடியாத் தவத்தினாற்
பின்னைப் பெறுமுணர்வு தான்

முந்திய ஜென்மங்களில் செய்த முற்றுப் பெறாத தவத்தினதும், இப்பிறவியில் முடியும்படி செய்த தவத்தினதும் பயனாக நல்லுணர்வினை அடையப் பெறலாம்

88. பேராத்தவத்தின் பயனாற் பிறப்பின்மை
யாராய்ந் துணர்வு பெறின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபாடில்லாது ஒரு நிலையில் செய்யும் தவத்தி னால்,ஆராய்ந்து நல்லுணர்வு பெற்றால் மறுபிறவியில்லை.

89. ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு.

அறிவுடைய சரீரத்தினால் கிடைக்கின்ற பயன் மௌன நிலையில்(சமாதிநிலை) கிடைக்கின்ற நல்லுணர்வு ஆகும்

90. ஆதியா யொன்று மறிவைப் பெறுவதுதா
னீதியாச் செய்த தவம்.

நேர்மையான முறையிற் செய்த தவத்தின் பயன், பாசத்தில் கட்டுப்பட்ட பசு பல பிறவிகள் எடுத்ததின் பயனால் முன்னிருந்த பரிசுத்த நிலையில் கலக்கும் அறிவைப் பெறுவதாகும்.

## அதிகாரம் 10: புத்தியுடைமை

91. பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தானோக்கின்
முத்திக்கு மூல மது.

ஜீவான்மா ஆனது அன்புப் பெருக்கினால் சதாசிவ நிலையைக் கண்டால் பிறவியற்ற மோட்ச நிலைக்கு அதுவே வித்தாகும்.

92. பாடியு மாடியும் பலகாலு நேசித்துந்
தேடுஞ் சிவ சிந்தையாம்.

சிவன் பால் அன்பு கொண்ட மனமானது பக்திப்பாடல்களால் பாடியும், ஆடியும், எக்காலமும் சிவனையே நினைத்து தேடும்.

93. பூசனை செய்து புகழ்ந்து புடைபட்டு
நேசத்தா லீசனைத் தேடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை செய்து கொண்டாடி மனம் ஒருமித்து அன்பினால் சர்வேஸ்வரனை தேடவேண்டும்.

94. அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை.

எம்மை ஆளும் சிவனை பக்தியினால் அழுதும் பாவங்களுக்காக அலறியும் எலும்பும் உருகும்படி நினைத்து பூசை செய்யவேண்டும்.

95. கண்ணாலுறப் பார்த்துக் காதலாற்றானோக்கி
லுண்ணுமே யீச னொளி.

ஜீவனானது கண்களால் உள்ளிருப்பதை அறிந்து பக்தியுடன் உற்று பார்த்தால் சதாசிவருபத்தின் ஒளியானது ஆசாபாசங்களை விழுங்கி விடும்.

96. எல்லா வுயிரையு மீசனெனக் கருதி
னில்லானோ வீச னிலைத்து.

உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்தையும் ஈசனின் திருவுருவம் என மனதில் நினைத்து தொழுதால், ஈசனின் திருவருள் நலைத்து நிற்கும்.

97. ஈசனெனக்கருதி யெல்லா வுயிர்களையு
நேசத்தாற் பார்த்துக் கொளல்

எல்லா ஜீவராசிகளையும் ஈசன் திருவுருவம் என்று நினைத்து அன்போடு பத்திசெய்து கொள்க

98.. அடியார்க் கடியரா யன்புருகித் தம்முட்
படியொன்றாய்ப் பார்த்துக் கொளல்.

ஈசனின் மேல் பேரன்பு கொண்ட அடியவர்களுக்கு அடிமையாகி அவர்களிடத்தில் உண்மையான அன்பு செலுத்தி எமது சரீரத்தினுள் உள்ள ஆதாங்கள் ஒவ்வொன்றிலும் அவ்வடியாரை நிறுத்தி அறிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. மெய்யன்பு கூர விதிர்ப்புற்று வேர்த்தெழுந்து
பொய்யின்மை கண்டுநின்று போற்று.

உண்மையான பக்தி அதிகரிக்க மயிர்க்கூச்செறிந்து வியர்வை பெருக உண்மையான மேல்நிலையை அறிந்து அனுபவித்துப் போற்ற வேண்டும்.

100. செறிந்தடங்கி நாடிச் செவ்விதா யுள்ளே
யுறிந்தரனை யார்ந்து கொளல்.

மன வீருப்புடன் பஞ்சேந்திரியங்களின் சேட்டைகள் அடங்க வைத்து சரியாக மனத்தினை ஆராய்ந்து சிவனின் ருபத்தை தேடவேண்டும்.

# திருவருட்பால்

## அதிகாரம் 11: அருள் பெறல்

101 அருளினா லன்றி யகத்தறி வில்லை
யருளின் மலமறுக்க லாம்.

சர்வேஸ்வரனின் திருவருளைத்தவீர சரீரத்தினுள் அறிந்து கொள்ளக்கூடிய வேறு பொருள் எதுவும் கிடையாது. இவ்வருளானது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களையும் அறுக்கக்கூடியது

102. இருளைக் கடிந்தென் றிறைவ னருளிற்
றெருளுஞ் சிவசிந்தையாம்.

இறைவனின் திருவருளால் மும்மலங்களின் மயக்கத்தை அடக்கினால் சிவனை சிந்திக்கும் உணர்வானது உருவாகும

103 மாசற்ற கொள்கை மதிபோலத் தோன்று
மீச னருள்பெற்றக் கால்.

ஈசனுடைய திருவருளை அடைந்தால் குற்றமற்ற தன்மையானது சந்திரனைப் போல் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. வாய்மையாற் பொய்யா மனத்தினான் மாசற்ற
தூய்மையா மீச னருள்.

உண்மையான மார்க்கதினாலும் மாறுபடாத மனத்தினாலும் இறைவனின் திருவருளினால் மனம் பரிசுத்தம் அடையும்.

105 உன்னுங்கரும முடிக்கலா மொள்ளியான்
மன்னு மருள் பெற்றக் கால்.

ஒளிபொருந்திய ஈசனுடைய நிலை பெற்றுள்ள அருளை அடைந்தால் நினைத்த கருமங்களை எல்லாம் முடிக்கலாம்.

106 எல்லாப் பொருளு முடிக்கலா மீசன் றன்
றொல்லை யருள் பெற்றக் கால்.

ஈசனுடைய பழைமையான திருவருளைப் பெற்றிருந்தால் உலகில் சிந்திக்கப் பெறும் எல்லாவற்றையும் செய்து முடிக்கலாம்.

107. சிந்தையு ணின்ற சிவனருள் பெற்றக்காற்
பந்தமாம் பாச மறும்.

மனத்தினுள் இருக்கும் சிவனுடைய திருவருளை அடைந்தால் உலக விடயங்களில் ஈடுபடுத்தும் ஆசை அறுந்து ஒழியும்.

108. ஓவாச் சிவனருள் பெற்றா லிசையன்றித்
தாவாத வின்பந் தரும்.

அழிவில்லாத சிவனின் திருவருளை அடைந்தால் இவ்வுலகில் புகழ் என்பது மாத்திரமன்றி மறு உலகிலும் அழியாத பேரின்பத்தை தரும்.

109. ஒவ்வகத்து ணின்ற சிவனருள் பெற்றக்கா
லவ்வகத்து ளானந்த மாம்.

ஓங்காரத்தில் நிலைபெற்றுள்ள சிவனின் திருவருளைப் பெற்றால் உள்ளத்திற்கு ஆனந்தம் உண்டாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. ஆவாவென் றேத்தி யருள்போற்ற லாங்கணடீ
ரோவாத ஞான வொளி.

அழியாத அறிவின் தன்மையால் ஆ , ஆ என அவ்வருளை தோத்திரம் செய்து ஈசனது கருணை நம்மை விட்டகலாது காப்பாற்றிக் கொள்ளலாம்.

## அதிகாரம் 12 : நினைப்புறுதல்

111. கருத்துற்றுப் பார்த்துக் கலங்காம லுள்ளத்
திருத்திச் சிவனை நினை.

உள்ளமும் சிந்தையும் பொருந்தச் செய்து மனக்கண்ணால் சிவசொருபத்தைப் பார்த்து அம்மனத்திலே அசையாதபடி நிறுத்தி சிவனை சிந்திக்க வேண்டும்.

112. குண்டலியி னுள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மணடலங்கண் மேலாகப் பார்.

குண்டலி சந்தியினுள் உள்ள ஈசனை மனத்தினால் சிந்தித்து மும்மண்டலங்களுக்கும் மேலான நிலையில் சர்வேஸ்வரன் இருப்பதை அறிந்து தரிசிக்க வேண்டும்.

113. ஓர்மின்கள் சிந்தையி லொன்றச் சிவன்றன்னைப்
பார்மின் பராபரனே யாம்.

பரமசிவனை மனத்திலே பொருந்த நினைத்து அறிந்து கொண்டால் சிவனே எல்லாப் பொருளுக்கும் உயர்ந்தவன் என அறியலாம்.

114. சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
மிக்க மலத்தை விடு.

உள்ளத்தில் மிகுந்துள்ள மும்மலங்களையும் நீக்கி அவ்வுள்ளத்திலே உள்ள ஈசனை பலமான சிந்தனையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. அறுமின்கள் சிந்தையி லாதாரத் தைச்சேர்ந்
துறுமின்க ளும்முள்ளே யோர்ந்து.

மனத்துள்ள மலங்களை நீக்கி, ஆறு நிலைகளிலும் ஈசனுடன் கலந்து உள்ளத்தை நன்கு அறிந்து பொருந்தியிருக்க வேண்டும

116. நித்த நினைத்திரங்கி நின்மலனை யொன்
றுவித்தான்
முற்றுமவனொளியே யாம்.

அநுதினமும் பரிசுத்தமான ஈசனை அவனருள் சித்திக்க வேண்டும் என வேண்டி மனத்தில் நிர்மானஞ் செய்தால், உடலின் உள்ளும் புறமும் ஈசனின் ஒளி மயமாக ஆகிவிடும்.

117. ஓசை யுணர்ந்தங்கே யுணர்வைப் பெறும்பரிசா
லீசன் கருத்தா யிரு.

சப்தத்தில் உண்டாகின்ற உணர்வைக்கொண்டு கிடைக்கின்ற அறிவின் தன்மையால் ஈசனையே சதாகாலமும் சிந்தனை செய்கின்ற நிலையில் இருக்க வேண்டும்.

118. இராப்பக லன்றி யிருசுடர்ச் சிந்திக்கிற்
பாராபத்தோ டொன்றாலு மாம்.

இரவுபகல் என்ற வேறுபாடின்றி சூரிய, சந்திர ஒளிகளை சிந்தனை செய்தால் பரம்பொருளோடு ஒன்றாக கலக்க இயலும்

119. வேண்டுவார் வேண்டும் வாக் கப்பால்
விரித்தெங்கும்
கணடாற் கரிதாஞ் சிவம்.

இறைவனிடத்தில் ஒன்றைக் கருதி துதிப்பவர்கள் விரும்பித் தோத்தரிக்கும் சொற்களுக்கும் அப்பால் கடந்தும் ஏனைய இடங்களில் பரந்தும், அத்தகையோரால் கண்டறிவதற்கும் சிவன் அரிய பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. மிக்க மனத்தான் மிகநினைந்து சிந்திக்கு
லொக்கச் சிவனுருவ மாம்.

பக்குவம் அடைந்த மனத்தை உடையவர் மிகவும் ஈடுபட்டுத் தியானித்தால் ஒப்பற்ற சிவனின் தோற்றம் வெளிப்படும்.

## அதிகாரம் 13: தெரிந்து தெளிதல்

121. தேறித் தெளிமின் சிவமொன்றே நெஞ்சத்துக்
கூடிற் பலகுணமு மாம்.

சதாசிவன் என்ற பொருளே நெஞ்சில் வீற்றிருப்பது அறிந்து தெளிவடைந்தால், சகல விதமான நற்குணங்களும் உண்டாகும்.

122. உண்டில்லை யென்னு முணர்வை யறிந்தக்
காற் கண்டில்லை யாகுஞ் சிவம்.

ஈசன் உண்டோ இல்லையோ என்னும் ஐயத்தோடு கூடிய உணர்ச்சியினை அறிந்தால் சிவனை ஒருகாற் காணக்கூடியதாகவும் ஒருகாற் காணமுடியாததாகவும் தோன்றிவீடும்.

123. ஒருவர்க் கொருவனே யாகு முயிர்க்கெல்லா
மொருவனே பல்குணமு மாம்.

எல்லா ஜீவராசிகளுக்கும், ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு விதமாக தோன்றுகின்ற கடவுள் ஒரு பொருளுக்கேயுள்ள பல குணங்களுமாய் அமைந்திருக்கிறான்

124. எல்லார்க்கு மொன்றே சிவமாவ தென்றறிந்
தாற் பல்லோர்க்கு முண்டோ பவம்.

உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் பரம்பொருள் ஒன்றுதான் உள்ளது என உணர்ந்தால் அனைவருக்கும் பிறப்பு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. ஆயு மிரவியு மொன்றே யனைத்துயிர்க்கு
மாயுங்கா லொன்றே சிவம்.

எல்லா ஜீவராசிகளுக்கும் ஆராய்ந்து அறியத்தக்க சூரியன் ஒரேதன்மையாகத் தோன்றுவதைப் போல் ஆராய்ந்து பார்த்தால் சிவனும் ஒன்றே ஆகும்.

126. ஓவாத தொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவர்க்கு மொன்றே தெளி.

எல்லா ஜீவராசிகளுக்கும் அழியாத பரம் பொருளே பல சடப்பொருளாக தோன்றும் தேவநிலை அடைந்த ஆன்மாக்களுக்கும் ஆதாரம் அதுவே என அறிக..

127. தம்மை யறியாதார் தாமறிவோ மென்பரோ
செம்மையா லீசன் றிறம்.

தம்மைத் தாமே அறிந்து கொள்ளாத அறிவிலிகள் உண்மையான ஈசனுடைய வல்லமையை யாம் அறிந்து கொண்டோம் என்று உரைப்பாரோ? மாட்டார்.

128. உலகத்திற் பட்ட வுயிர்க்கெல்லா மீச
னிலவியே நிற்ப ணிறைந்து.

உலகிலிருக்கின்ற எல்லா ஜீவராசிகளுக்கும் ஈசன் பரவியும் நிறைந்தும் நிலைபெற்றிருக்கின்றான்.

129. உலகத்தின் மன்னு முயிர்க்கெல்லா மீச
னலகிறந்த வாதியே யாம்.

உலகின் கண் நிலைபெற்றிருக்கும் எல்லா சடப்பொருளிற்கும் எல்லை கடந்த மூலப்பொருள் ஈசனே.

130. எல்லா வுலகத் திருந்தாலு மேத்துவர்க
ணல்லுலகி னாத னடி.

எல்லா உலகங்களிலும் இருந்தாலும் நல்லுலகிற்கு காரணமாண ஈசனின் திருவடிகளை வணங்குவார்கள அடியார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 14: கலைஞானம்

131. சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுரு
வின் முத்திக்கு மூல மது.

பெண் ரூபமாகிய சந்திரனை(சந்திரகலை) ஆண்ரூபமாகிய சூரியன் ஊடுருவிக் கலந்தால்(சூரியகலை) அதன் மார்க்கமானது மோட்சத்திற்கு காரணமாகும்

132. அயனங்கொள் சந்திரனா லாதித்த னொன்றி
னயனமா முத்திக்கு நாடு.

வளர்ச்சி தேய்வு எனும் வேறுபாடு உடைய சந்திரகலை சூரியகலையோடு பொருந்தினால் மோட்ச வீட்டைக்காணும் ஞானக் கண்ணாகும்.

133. ஈசனோ டொன்றி லிசையாப் பொருளில்லைத்
தேச விளக்கொளியே யாம்.

சர்வேஸ்வரனுடன் கூடிவிட்டால் சித்திப்பதற்கு முடியாத பொருள் இல்லை. அப்பொருளானது ஞானச் சுடராக பிரகாசமான தூண்டா விளக்கின் ஒளியாகவே தோன்றும்.

134. அஞ்சாலு மாயா வரம்பொரு ளின்பங்க
டுஞ்சா தவர்துறக்க வீடு.

பஞ்ச அவஸ்தைகளாலும் அழியாத அறம், பொருள், இன்பம் மூன்றையும் இறவாமல் இருப்பவர்கள் (பிறவி ஒழித்தவர்கள்) வீட்டுவீடும் மார்க்கமாகும்.

135. தாஞ்செய் வினையெல்லாந் தம்மை யறவுணரிற்
காஞ்சனமே யாகுங் கருது.

தன்னைத் தான் அறிந்தவர்கள் எப்படிப்பட்ட வினைகளைச் செய்திருப்பினும் அவை எல்லாம் பொன் போன்றன எனத் தெரிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. கூடக மான குறியெழுத்தைத் தானறியில்
வீடக மாகும் விரைந்து.

மறை பொருளான குறிப்பான எழுத்து என்னும் ஓங்காரத்தை ஜீவான்மா தெரிந்து கொள்ளின் சீக்கிரமாக மோட்ச நிலையை அடையப் பெறும்.

137. வீடக மாக விரைந் கின்மை வேண்டுமேற்
கூடகத்திற் சோதியோ டொன்று.

பந்த பாசம் நீங்கி சீக்கிரத்தில் சூனிய நிலையை அடைய விரும்பினால் பிரணவ நிலையில் சோதியோடு ஒன்றுபட்டிருக்க வேண்டும்.

138. பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து.

எங்கும் வியாபித்திருக்கும் சிவனுடன் கூடினால் மனம் பெருமை உடையதாகும்.

139. இரேசக மாற்றி யிடையறா தேநிற்கிற்
பூரிப்ப துள்ளே சிவம்.

இரோசகஞ் செய்து கலைகளை இடைவீடாது மாற்றி மாற்றி ஒரு நிலையில் நின்றால் பரம்பொருள் உள்ளே நிறைந்து விளங்கும்

140. சிந்தையி னின்ற நிலைவிசும்பிற் சங்கரனுஞ்
சந்திரனாத் தோன்று முணர்வு.

மனத்தில் உண்டாகிய உண்மையினால் ஆகாயத்தில் பரமசிவனும் சந்திரகலையாக உணர்வீடத்தில் தோன்றும்.

## அதிகாரம் 15:உருவொன்றி நிற்றல்

141 எள்ளகத் தெண்ணே யிருந்ததனை யொக்குமே
யுள்ளகத் தீச னிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலிருக்கும் ஈசனுடைய நிலையானது எள்ளிடத்தில் எண்ணெய் வியாபித்திருப்பதை ஒத்திருக்கும்

142. பாலின்க ணெய்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின்க ணீச நுழைந்து.

பாலினுள் வெண்ணெய் பரந்து அடங்கியிருப்பதைப் போல ஈசன் நாடிகளினுடாக உடல் எங்கும் பரவி நிற்பான்.

143. கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யு
மிரும்புண்ட நீரு மியல்பு.

கரும்பினிடத்திலுள்ள வெல்லமும் காய்ச்சிய பாலினிடத்திலுள் நெய்யும், காய்ச்சிய இரும்பினால் இழுத்துக் கொண்ட நீரும் ஈசனுடைய குணங்களாகும்.

144. பழத்தி னிரதம்போற் பரந்தெங்கு நிற்கும்
வழுத்தினா லீச னிலை.

ஈசனுடைய உண்மை நிலையை அறிந்து துதித்தால் பழத்தினுள் பரவி இருக்கும் பழரசம் போல் எல்லா ஜீவன்களிடத்திலும் வியாபித்திருக்கும்.

145. தனுவொடு தோன்றுமே தானெல்லா மாகி
யணுவதுவாய் நிற்கு மது.

உலகம் முழுவதும் தானேயாகி நிற்கும் ஈசன் அன்பர்களுக்கு காட்சிதரும் பொருட்டு உருவம் தாங்கி தோன்றுவான்.

146. வித்து முளைபோல் விரிந்தெங்கு நிற்குமே
யொத்துளே நிற்கு முணர்வு.

மனத்தினுள்ளே ஒத்து நிற்கும் உணர்ச்சியானது விதையின் முளை கிளப்பிப் பரவுவதைப் போல் உடல் முழுவதும் பரந்து நிற்கும்.

147. அச்சமாங் கார மகத்தடக்கி னாற்பின்னை
நிச்சயமா மீச னிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தையும் அகங்காரத்தையும் மேல் எழாதபடி அடக்கிவிட்டால் பின்பு ஈசனுடைய உண்மையான நிலை விளங்கும்

148. நினைப்பவர்க்கு நெஞ்சத்து ணின்மலனாய்
நிற்கு மனைத்துயிர்க்குத் தானா மவன்.

எல்லா உயிர்களுக்கும் உயிர் போன்ற ஈசன் தன்னை நினைப்பவர்களுக்கு அவர்கள் மனத்தில் பரிசுத்தமான தோற்றத்தோடு விளங்குவான்.

149. ஓசையி னுள்ளே யுதிக்கின்ற தொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து.

வாசனையுள்ள மலரின் மணம் பக்கம் முழுவதும் வியாபித்திருப்பதைப் போல் ஓங்கார சப்தத்தினுள் தோன்றும் பொருள் ஒன்று உண்டு.

150. மோட்டினீர் னாற்ற முளைமுட்டை போலவே
வீட்டுள்ளே நிறகும் வியப்பு.

சரீரத்தினுள் இருக்கும் ஈசனின் நிலையானது, மேட்டிலிருக்கும் நீர், வாசனை, வித்திலிருந்து எழும் முளை, கருவுயிர்ப்பு என்பன போல் நிற்கும் ஈசன் ஆச்சரியமானதாகும்.

## அதிகாரம் 16 : முத்தி காண்டல்

151. மனத்தோ டுறுபுத்தி யாங்காரஞ்சித்த
மனைத்தினு மில்லை யாது.

மனம்,. அதனோடு பொருந்திய அறிவு, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கும் முத்திக்கு வழியே அன்றி முத்தி அல்ல.

152. வாக்குங் கருத்து மயங்குஞ் சமயங்க
ளாக்கிய நூலினு மில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிலும் எண்ணங்களிலும் மயக்குகின்ற மதநூல்களிலும் முத்தி காணப்பெறாது.

153. தனக்கோ ருருவில்லை தானெங்குமாகி
மனத்தகமாய் நிற்கு மது.

முத்தியானது தனக்கென்று குறிப்பிட்ட உருவமின்றி தான் எல்லா இடத்திலும் பரந்து மனத்தினுள் கலந்து இருக்கும்.

154. உருவமொன் றில்லை யுணர்வில்லை யோது
மருவமுந் தானதுவே யாம்.

முத்தியானது தனக்கென்று உருவமின்றி, பிறரால் அறியப்படும் தன்மையற்று பெரியோர் பாராட்டும் உருவற்ற நிலையான அருவமாகும்.

155. பெண்ணா ணலியென்று பெயரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.

முத்தியானது பெண், ஆண், இரண்டுமற்ற அலி என்று ஒருவிதமான குறியீடும் இல்லாததாய் ஆகாயத்தைப் போனறு நிலைபெற்றுள்ளது வியப்பானதாகும்

156. அனைத்துருவ மாய வறிவை யகலிற்
றினைத்துணையு மில்லை சிவம்.

எல்லா உருவங்களுமாகின்ற அறிவை விட்டால் சிவமானது ஆன்மாவிடம் சிறிதளவும் இல்லையாகும்.

157. துணி முகத்துக் காதியாத் துன்னறி வன்றி
யணித்தா ரிரண்டு விரல்.

துன்பங்களைத் தணிக்கின்ற பிரணவ அறிவுக்குக் காட்டே சின்முத்திரை ஆகிய இரண்டு விரல்கள்.

158. மயிர் முனையிற் பாதி மனத்தறி வுண்டே
லுயிர்ப்புண்டாங் காதி நிலை.

ஒரு மயிர் முனையில் பாதியளவு பிரணவ அறிவு இருக்குமாயின், அங்கு பரம சிவனது உண்மை நிலையானது உயிர் பெற்றுத் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159. தற்பரமாய் நின்ற சதா சிவத்தோ டொன்றி
லுற்றறி வில்லை யுயிர்க்கு.

ஜீவராசிகளின் உயிர் நிலையான, சிவத்தோடு சேர்ந்தால் அச்சீவராசிக்கு பிற இந்திரிய உணர்ச்சிகள் கிடையாது

160. உறக்க முணர்வு பசிகெடப் பட்டாற்
பிறக்கவும் வேண்டாம் பெயர்ந்து.

தூக்கமும் ஐம்புல உணர்ச்சியும் நீங்கினால் மறுபடியும் பிறக்க வேண்டிய நியதி உயிர்க்கு இல்லாமற் போகும்.

## அதிகாரம் 17 : உருபாதீதம்

161. கருவின்றி வீடாங் கருத்துற வேண்டி
லுருவின்றி நிற்கு முணர்வு.

மறுபிறவி இல்லாமல் பந்தபாசங்களினின்றும் நீங்கிக் கொள்ள மனம் விரும்புமானால் உணர்ச்சியானது உருவம் இல்லாமல் இருக்கும்.

162. பிறத்தலொன் றில்லை பிறவாமை வேண்டி
லறத்துறுவ மாற்றி யிரு.

மறுபிறப்பு வேண்டாமெனில் தரும சிந்தனையுடன் இருந்தால் பிறப்பு என்று ஒன்றும் கிடையாது.

163. உருவங்க ளெல்லா மறத்திற மாக்கிற்
கருவொன்று மில்லைக் கருத்து.

சரீரசம்பந்தமான பொருட்களின் தன்மை எல்லாம் தர்ம சிந்தனையில் செல்லச் செய்தால் பிறப்பு இல்லை என்பதை கருத்திற் கொள்.

164. கறுப்பு வெளுப்புச் சிவப்புப்பொன் பச்சை
யறுத்துரவ மாற்றியிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு, வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை என்றும் ஐம்பூதங்களையும் நீக்கி சிவசொருபத்தை மனத்தில் இருத்தல் வேண்டும்.

165. அனைத்துருவ மெல்லா மறக்கெடுத்து நின்றால்
வினைப்பிறவி யில்லையாம் வீடு.

சரீரத்தின் உள்ளும் புறமும் காணும் எல்லா உருவங்களையும் முற்றாக அழித்து இருந்தால் வினைப்பயனால் பெறும் மறுபிறப்பில்லை அதுவே ஜென்ம விமோசனமாகும்.

166. நினைத்துரவ மெல்லா நீசெம்மை கண்டாற்
பிறத்தலொன் றில்லையே யாம்.

நீ எல்லா பொருக்களிலும், அவற்றின் நன்மையினை மட்டும் கண்டால் மறுபிறவியென்று ஒன்றில்லை

167. நினைப்புமறப் பின்றி நிராதரமாய் நின்றாற்
றனக்கொன்று மில்லைப் பிறப்பு.

உலகவிடயங்களில் விருப்பு, வெறுப்பு இன்றி ஆசை நீங்கிய நிலையில் இருந்தால் அவ்வான்மாவிற்கு வேறு பிறவிகள் ஒன்றும் கிடையாது.

168. தோற்று முணர்வை யறுத்துப் புறத்துணர்வை
மாற்று முணர்வது வீடு.

உள்ளத்து இச்சையால் உண்டாகும் உணர்ச்சியினை விலக்கி பஞ்பூதங்களின் இயல்பால் எழும் உணர்வுகளை தனது யோகத்திற்கேற்ப மாற்றிக்கொள்வதே மோட்சமாகும்.

169. பிறப்பறுக்க வீடாகும் பிண்டத்து ணின்ற
வறத்துருவ மாற்றி யிரு.

சரீரத்தினுள் தருமசொருபமான ஈசனை இருத்தினால் பிறவியும் அறுபட்டு மோட்சநிலையை எய்தும்.

170. ஓசை யுணர்வோ டுயிர்ப் பின்மை யற்றக்காற்
பேசவும் வேண்டா பிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையையும், உணர்ச்சியையும், பெருமூச்சையையும் ஒழித்தால் மறுபிறப்பு என்று ஒன்று இல்லை.

## அதிகாரம் 18 :பிறப்பறுத்தல்

171. தன்னை யறியு மறிவு தனையறியிற்
பின்னை பிறப்பில்லை வீடு.

தன்னைத் தானே அறியும் உணர்வினைப் பெற்றால் அதன்பின் பிறவியில்லை மோட்சமேயாகும்

172. அறம்பாவ மாயு மறிவுதனை யறிந்தாற்
பிறந்துழல வேண்டாம் பெயர்ந்து.

நன்மை, தீமை என்பன ஆராயும் அறிவினைப் பெற்றால் மீண்டும் பிறந்து மேலும் பிறவியின் தீமையில் கஷ்டப்பட வேண்டியதில்லை.

173. சிவனுருவந் தானாச் செறிந்தடங்கி நிற்கிற்
பவனாச மாகும் பரிந்து.

சிவனுடைய சொருபமே தன்னுடைய ருபமாக கலந்து அடங்கியிருந்தால் பிறவி அழிந்து விடும்.

174. உறக்க முணர்வோ டுயிர்ப்பின்மை கெட்டாற்
பிறப்பின்றி வீடாம் புறம்.

தூக்கம், ஐம்புல உணர்வு, உயிர்ப்பு இவை யாவும் ஒன்றோடொன்றிசைந்து நீங்கினால், வேறு பிறப்பு இல்லாமல் மோட்சமுண்டாகும்.

175. நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றா
லனைத்துலகும் வீடா மது.

பொருள்களின் மேல் விருப்பு, அவற்றை விலக்க எண்ணும் வெறுப்பு, பசி என்பன ஒழிந்தால், எங்கிருப்பினும் மோட்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. தன்னை யறிந்து செறிந்தடங்கு தானத்தாற்
பின்னைப் பிறப்பில்லை வீடு.

தன்னைத் தான் அறிந்து தானென்ற அகங்காரத்தை நீக்கினால் பிறகு ஜென்மமில்லாமல் மோட்சமுண்டாகும்.

177. உடம்பிரண்டுங் கெட்டா லுறுபொருளொன்றுண்டு
திடம்படு மீசன் றிறம்.

தூல, சூக்கும உடல்கள் இரண்டும் கெட்டால் நிச்சயமான ஈசனுடைய வல்லமையை(சக்தியை) அடைய முடியும்

178. மருளன்றி மாசறுக்கின் மாதூவெளியா
யிருளன்றி நிற்குஞ் சிவம்.

காமவெகுளி மயக்கமில்லாமல் உள்ளக் களங்கத்தினை ஒழித்தால் பெரிய பரிசுத்தமான மனத்தில் ஈசன் பிரகாசமாய் குடியிருப்பான்.

179. விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டா
லகாரமாங் கண்டீ ரறிவு.

மனோ விகாரங்களை ஒழியும்படியாக மாற்றி உண்மையான தத்துவ ஞானத்தைக் கண்டால் அறிவானது அகாரரூபமாய் பிரணவத்தின் மூலப் பொருளாகி விடும்.

180. சிந்தையாங் காரஞ் செறிபுல னற்றக்கான்
முந்தியே யாகுமாம் வீடு.

மனம், அகங்காரம், ஐம்புல சேட்டை ஆகியவற்றை நீக்கினால் சீக்கிரத்தில் மோட்சம் உண்டாகும்.

## அதிகாரம் 19 :ஒளி காண்டல்

181. தோன்றிய வெல்லாந் தொடக்கறுத்துந் தூய்வெளியாய்த்
தோன்றியக்காற் றூய வொளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் தோன்றிய எல்லாவற்றினதும் சம்பந்தத்தை விலக்கி பரிசுத்த வெளியை காணப்பெறும் போது பரிசுத்தமான ஒளி பிறக்கும் ஞானம் உதயமாகும்.

182. தெளிவாய தேச விளக்கொளி காணில்
வெளியாகி வீடதுவே யாம்.

தெளிந்த அந்தராத்மாவின் பிரகாசமான ஒளியை கண்டால் தூலசரீரம் சூனிய நிலையாகி மோட்ச நிலை எய்தும்.

183. மின்போ லுருவ விளக்கொளிபோன்
மெய்க்காணிற்
பொன்போல மூலம் புகும்.

மின்னலைப் போலவும் விளக்கின் ஒளியைப் போலவும் தேகம் சூனிய நிலையை அடையப் பெற்றால் பொன் தீயினுள் உருகியிறங்குவதைப் போல் மூலாதாரத்தினுள் ஈசன் புகுவான்.

184. பளிங்கு வலம்புரி பானிறத்த னாகிற்
றுளங்கொளி யாந் தூயவொளி.

அடுத்தது காட்டும் பளிங்கு தன்னடைந்த நீரைத் தூய்மை செய்யும் சங்கு, அழுக்கையும் வியாதியையும் அகற்றும் பால் என்பவற்றின் தன்மை உடையவனெனில் உலகத்தையே அசைக்கும் பரிசுத்தமான ஒளிமயம் பெற்ற உடல் உடையவனாவான்.

185. சங்கு நிறம்போற் றவள வொளிகாணி
லங்கையி லெல்லியத்தே யாம்.

சங்கின் நிறத்தையொத்த வெண்மையான சரீரத்தின் ஒளியை அடைந்தால் உள்ளங்கையில் சூரியகிரணத்தின் தொகுதியைக் கண்டது போல் இருக்கும்.

186. துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து.

மனமாசினை அகற்றிய தூண்டா விளக்குப் போனற ஒளியினைக் கண்டால் விளக்கமுடைய மோட்சநிலை விரைவில் உண்டாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187. மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றி
லன்னைப் பிறப்பியையு மாம்.

மின்மினி பூச்சி போன்று வீட்டுவீட்டு ளியும் விளக்காக ஒரு ஜீவன் இருக்குமானால் அதற்கு மறுபடியும் தாய் வயிற்றில் உதிக்கும் பிறவி கிடைத்து விடும்.

188. உள்ளொளி தோன்றி லுன்னி வருமொளியால்
லவ்வொளி யாதி யொளி.

சாதனையால் அக ஒளி தோன்றும். இவ் அக ஒளி ஆதியான சிவ ஒளியைக் காட்டும்.

189. பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணிற்
பரம்பரமே யாய வொளி.

பரந்துள்ள சூனிய நிலையில் வியாபித்திருக்கின்ற ஜோதிப் பிரகாசத்தைக் கண்டால் அதுவே சதாசிவரூபமாகிய மூலப்பிரகாசம் ஆகும்.

190. ஆதியொளியாகி யாள்வானுந் தானாகி
யாதி யவனருவ மாம்.

மூலாக்கினியின் ஒளியாகவும் உடலின் உள்ளும் புறமும் ஆள்பவனுமாகவும் இருக்கின்ற மூலம் சிவசொருபமேயாகும்.

## அதிகாரம் 20 : சதாசிவம்.

191. பத்துத் திசையும் பரந்த கடலெங்கு
மொத்தெங்கு நிற்குஞ் சிவம்.

சிவன் பத்துத் திக்குகளிலும் வீற்திருக்ம் கடல் எங்கும் ஒரே தன்மையாக எல்லா இடங்களிலும் பொருந்தி இருப்பார்.

192. விண்ணிறைந்து நின்று விளங்கு சுடரொளிபோ
லுண்ணிறைந்து நிற்குஞ் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தில் நிறைந்து பரவி இருக்கும் சூரிய ஒளி போல சிவன் உள்ளகத்து நிறைந்து கலந்து வியாபித்திருப்பர்.

193. காயமுஞ் சீவனு மோசையுந் தானாக
யேகமாய் நிற்குஞ் சிவம்.

சரீரமும் அதிற் பொருந்திய ஜீவனும் அச்சரீரத்தை இயக்கும் ஒளிச் சக்தியும் அவனேயாகியும் தனித்தும் நிற்பான் இறைவன்.

194. வாயுவாய் மன்னுயிராய் மற்றவற் றுட்பொருளா
யாயுமிடந் தானே சிவம்.

காற்றாகியும் நிலைபெற்ற உயிராகியும் அவற்றுள் அடங்கிய அந்தராத்மாவாகியும் நிற்பது சிவமாகும்

195. எண்ணிறந்த யோனிப பரமாய்ப் பரந்தெங்கு
மொன்றாகி நிற்கும் சிவம்.

கணக்கற்ற பிறவிவகையாக உலகம் முழுவதும் பரவி அவற்றின் உள்ளகத்தினுள் நிறைவாக நிற்பன் சிவன்.

196. ஒன்றேதா னூழா முதலாகி யெவ்வுயிர்க்கு
மொன்றாகி நிற்குஞ் சிவம்.

தான் தன்னந் தனியனாக ஊழ் யாவற்றிற்கும் வித்தாக அமைந்து அவ்வூழின் தன்மையை ஏற்று எல்லா ஜீவராசிகளுக்கும் ஒரு தன்மையாய் பரமசிவனிருப்பான்

197. மூலமொன்றாகி முடிவொன்றா யெவ்
வுயிர்க்குங் காலமாய் நிற்குஞ் சிவம்.

ஜீவராசிகள் யாவற்றின் பிறப்பிற்கும் தானே ஒரு காரணமாகவும் அழிவிற்கும் தானே ஒரு காரணமாகவும் பிறப்பு இறப்பிற்கு இடைப்பட்ட காலமுமாக சிவன் நிற்பன்.

198. மண்ணிற் பிறந்த வுயிர்க்கெல்லாந் தானாகி
விண்ணகமே யாகுஞ் சிவம்.

சிவன் உலகிலுதித்த உயிர்களுக்கெல்லாம் தானே காரணப் பொருளாகி அவற்றின் மன வெளியில் சஞ்சரிப்பவனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

199. தோற்றமது வீடாகத் தொல்லைமுத லொன்றாகி
யேற்றிவரு மீச னுளம்.

உருவத்தில் சூனிய நிலையாகவும் அனாதி காலந்தொட்டு ஒரே தன்மையானதாகவும் ஈசன் உளன்.

200. நிற்கும் பொருளு நடப்பனவுந் தானாகி
யுற்றெங்கு நிற்குஞ் சிவம்.

நிலைத்திருக்கும் பொருட்களும் இயங்குகின்ற பொருட்களும் தானே ஆகி எங்கும் எப்பொழுதும் பொருந்தியிருப்பது சிவனாகும்.

## அதிகாரம் 21 : குருவழி

201. குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

ஆசானது பாதத்தில் வணங்கி பூசை செய்து ஈசுவர நிலையை அடையலாம். ஏனையவர்களுக்கு சிவன் காணாத பொருளாவே அமையும்.

202. நிற்கும் பொருளு நடப்பனவுந் தானாகி
யுற்றெங்கு நிற்கும் சிவம்.

நிற்கின்ற இயங்குகின்ற (நடக்கின்ற) பொருள்கள் யாவையும் தானாக உள்ளே பொருந்தி எங்கும் வியாபித்திருக்கும் சிவம்..

203. தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சகத்து
ளன்பா யிருக்குஞ் சிவம்.

குருவினது வணக்கத்தால் தனதுள்ளத்தினுள்ளேயே சிவனை அறிந்த தவத்தினை உடையவர்களின் மனத்தினுள்ளே ஈசன் அன்புடன் பொருந்தியிருப்பான்.

204. சிந்தை சிவமாகக் கொண்டவர் சிந்தையுட்
சிந்தித்து நிற்குஞ் சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவினை சிவமாகப் பாவித்துக் காண்பவர்களின் மனத்தினுள்ளே சிவன் பொருந்தியிருப்பான்.

205. தலைப்பட்ட சற்குரு தன்னரு ளல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

சிறந்த நல்லொழுக்கத்து ஆசானது அருளினாலல்லாமல் ஒருவன் கற்ற வித்தை வலையிலகப்பட்ட மான்போல் பயனற்று போகும்.

206. நல்லன நூற்பல கற்பினுங் காண்பரிதே
தொல்லையில் லாத சிவம்.

நன்மையே தரும் பலவற்றை வாசித்தறியினும் சிவமாகிய பழம்பொருளை குருமுகமில்லாவிடில் காணமுடியாது.

207. நெறிப்பட்ட சற்குரு நேர்வழி காட்டிற்
பிரிவற் றிருக்குஞ் சிவம்.

உண்மை வழியிற் பொருந்திய உத்தம ஆசான் சரியான உண்மையான வழியைக் காட்டினால் சிவன் உள்ளத்திலே பிரிவின்றிக் கலந்திருப்பார்.

208. நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம்.

சிவன் நினைப்பு, மறப்பு என்ற இருநிலைகளையும் கடந்திருப்பவர்களின் மனத்தினில் பிரிவின்றிக் கலந்திருப்பான். குருவே ஈசனை நினைப்பற நினைப்பவன்.

209. ஒன்றிலொன் றொத்த தவமுடை யாரன்றி
யென்றுமொன் றாது சிவம்.

வேறுபாடற்ற தவப்பேறுடைய குருவிடமே சிவம் நிற்கும்.

210. நாட்டமில் லாவிட நாட்ட மறிந்தபின்
மீட்டுநா டாது சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கண்ணின் பார்வை செல்லா இடமாகிய கபாலத்தில் பார்வை பெற்ற பிறகு சிவம் வேறோர் இடத்தை நாடி விலகாது.

## அதிகாரம் 22 : சித்தமோ டொன்றல்.

211. சித்தமோ டொன்றி மனமு மிருந்தக்கான்
முற்று மழியா துடம்பு.

அறிவும் மனமும் ஒன்றுடன் ஒன்று பொருந்தியிருப்பின் தூலஉடம்பு முற்றிலும் அழிய வேண்டியதில்லை

212. நிரவி யழலுருவாய் மீண்டிடக் காணி
லரனவனே யாகு முடம்பு.

சக்தி சரீரம் முழுவதும் பரந்த அக்கினி சொருபமாய் சூனிய நிலையை அடைந்து மீண்டும் மூலாதாரத்தை அடையப்பெற்றால் சரீரமே பரமசிவத் தன்மையை அடையும்.

213. உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

சுக்குமம் அக்கினி சொருபமாக மனத்தினுள் சென்று புருவமத்தியினூடாகச் சிவசொருபத்தைப் பார்

214. அகம்புறம் பேராப் பொருளை யறியி
லுகம்பல காட்டு முடம்பு.

உள்ளும் வெளியிலும் மாறாத பொருளாகிய சிவனை அறிந்தால் சரீரமானது பலனை யுகாந்தங்களாக தானிருந்து சரீரத்தின் அழியாத்தன்மையைக் காட்டும்.

215. ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபி
னோவிய மாக முடம்பு.

சுவாசத்தை பாழாக்காமல் அடக்கி நிறுத்தினால் சரீரமானது சித்திரத்தைப் போல் அசைவற்ற சமாதி நிலையை அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216. தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினான்
மாயாது பின்னை யுடம்பு.

அக்கினி சொருபமாக மனத்தினுள்ளே தெளிவு பெற ஞானத்தைப் பார்த்தால் சரீரமானது பின்பு அழியாது.

217. அஞ்சு மடக்கி யறிவோ டறிந்தபின்
றுஞ்சுவ தில்லை யுடம்பு.

ஐம்புலன்களையும் அடக்கி ஆசான்காட்டிய அறிவோடு யோகத்தை கண்ட பிறகு ஏனைய மானிட சரீரத்தை போன்று உடம்பு அழிவது கிடையாது.

218. தானந்த மின்றித் தழலுற நோக்கிடி
லானந்த மாகு முடம்பு.

ஆன்மா முடிவில்லாமல் முடிவில்லா அக்கினியைப் பொருந்தப் பார்த்தால் சரீரம் ஆனந்தமாய் விடும்.

219 ஒழிவின்றி நின்ற பொருளை யுணரி
லழிவின்றி நிற்கு முடம்பு.

எங்கும் நீங்காமல் வியாபித்திருக்கும் சிவத்தை தரிசித்தால் சரீரமானது அழிவில்லாமல் இருக்கும்.

220. பற்றற்று நின்ற பழம் பொருளைச் சிந்திக்கின்
முற்று மழியா துடம்பு.

எவ்விதமான பற்றும் இன்றி நிற்கின்ற பரம் பொருளான சிவனை நினைத்தால் சரீரம் அழியாது.

## அதிகாரம் 23 : அருணோதய தரிசனம்

221. வன்னிய தெட்டு மதியம் பதினாறு
முன்றினன் பன்னிரண்டும் முன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசத்திற்கு அதிபதிகளாகிய அக்கினிக்கு எட்டுக் கலைகளும் சந்திரனுக்கு பதினாறு கலைகளும் சூரியனுக்கு பன்னிரண்டு கலைகளும் உண்டென்பர்.

222. சூரியன் வன்னியொன் றாகவே சோமனாம்
பாரு மினிது பயன்.

சூரிய, அக்கினி கலைகள் ஒன்றுபட்டால் வெளியாகின்ற சந்திரத்தன்மையின் இனிய பயனை அறிதல் கூடும்.

223. மதியொடு காலும் வன்னியொன் றாகவே
கதிரவ னாமெனவே காண்

சந்திரனிற் பொருந்திய காற்றென்னும் கலையும் அக்கினிக்கலையும் ஒன்றுபட சூரிய கலையாகவே காணப்படலாம்.

224 வன்னி கதிரவ னொன்றாகக் கூடிட
வுன்னோசை யாகு மிவ்வாக்கு.

அக்கினியும் சூரியனும் ஒன்றுகூட நாதம் பிறக்கும்.

225. மதிக்குட் கதிரவன் வந்தொடுங்கி னாலு
முதிக்குமாம் பூரணையென் றோது.

சந்திரனுள் சூரியன் அடங்கிவிட்டால் பூரணை என்னும் முழுமதி தோன்றும்

226. ஏறு மதிய மிறங்கி லுறங்கிடுங்
கூறுமப் பூரணையாக் கொள்.

ஏறும் சந்திரக் கலை இறங்கினால் சூரியகலை அடங்கிவிடுவதால் பெளரணையாகவே கருதுக.

227. தோன்றுங் கதிரவ னுண்மதி புக்கிடிற்
சாற்று மமாவாசை தான்.

காணக்கூடிய சூரியக்கலையினுள் சந்திரகலை புகுந்து அடங்கிவிட்டால் சொல்லும்படியான அமாவாசையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228. உதிக்குங் கதிரவ னோடு மதிபுகுந்தான்
மதிக்கு மமாவாசை தான்.

காலையிற் தோன்றும் சூரிய கலையோடு சந்திரகலை புகுந்து அடங்கிவிட்டால் அமாவாசையென்றே கருதப்படும்

229. அமாவாசை பூரணை யாகுமவர்க்குச்
சமனா முயிருடம்பு தான்.

அமாவாசை, பூரணை இரண்டையும் தன்னுள் ஆக்கிக் கொள்பவர்களுக்கு உயிரும் உடம்பும் சமனாகும்

230. அட்டமாசித்தி யடையுமோ ராண்டினிற்
றிட்ட மதனைத் தெளி.

இந்நிலை கைவரப்பெற்றோர் ஓராண்டில் அட்டமா சித்திகளைப் பெறுவர்.

## அதிகாரம் 24 : காலசரம்

231. கொண்டிடு மண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டத்தி னுள்ளாய் விடும்.

முழு உலகத்தையும் தம்முள் அடக்கிய சூரிய, சந்திர, அக்கினி என்ற முச்சுடரும் அருணோதயத்துச் சிவத் பெற் ஆறாலை சரீரத்தினுள் அடங்கிவிடும்.

232. வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம்.

வெள்ளி, புதன், திங்கள் என்ற மூன்று நாட்களிலும் சுவாசத்தை இடப்புறமாகிய சந்திர நாடியிற் செல்லுமாறு அமைத்தல் வேண்டும்..

233. செவ்வாய் குருசனி ஞாயிறு வலமாய்க்
கொள்ளுமின் கால சரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய், வியாழன், சனி,ஞாயிறு என்ற நான்கு நாட்களிலும் சுவாசத்தை வலப்புறமாகிய சூரிய நாடியிற் செல்லுமாறு அமைக்க வேண்டும்.

234. இயங்கும் பகல்வல மிரவி லிடமதாய்த்
தயங்குற னாடிக்குட் டான்.

நாடிகளில் பகற்பொழுதில் வலமாகவும், இராப்பொழுதில் இடமாகவும் ஒன்றுக்கொன்று மாறி மூச்சை வழங்குதல் பொருந்தும்.

235. வளர்பிறை பொன்னிடம் வலமது தேய்பிறை
யளவினி லொன்றே யறி.

வியாழனுக்கு வளர்பிறையில் இடப்புறமும் தேய்பிறையில் வலது புறமும் என்று அறிக.

236. வலத்துச் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்தப் போயின்று செயல்.

சுவாசத்தை சனிக்கிழமைகளில் இரவும் பகலும் வலது புறமாகவே செல்லச் செய்தால் ஏனைய நாட்களில் சுவாச விதிக்கு மாறியிருப்பினும் செப்பனாகும்.

237. சூரிய னீராறுஞ் சோமன் பதினாறுஞ்
சேர விளையுஞ் சரம்.

சுவாசம் சூரியகலையில் பன்னிரண்டும் சந்திரகலையில் பதினாறுமாக பொருந்த விளையும்.

238. ஒன்றரை யொன்றேகா லொன்றுமுக்காலேயரை
மண்முதலா மாம்பூத மைந்து.

மண் முதலிய பூதங்கள் ஐந்திற்கும் சுவாசத்தின் அளவு முறையே ஒன்றரை, ஒன்றேகால், ஒனறு, முக்கால், அரை என்பவாம்.

239. இருபத்தோ ராயிரத் தறுநூற்றுக் காலு
மொருதினத்துக் குள்ளதொன் றோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோறும் ஒவ்வொருவரும் சுவாசிக்க வேண்டிய எண்ணிக்கை இருபத்தோராயிரத்து அறுநூறு ஆகும்.

240. அச்ச மறியா தமலன் பொருந்தாதா
ரெத்தனை மாண்டார் சகம்.

வெகு சுலபமாக சுவாச தம்பனத்தால் கலைகளை இயக்கி அமலனை அடையலாமென்றிருக்க, இத்தனை சுவாசமும் பழுதாகின்றனவே எனறு அஞ்சாமல் எத்தனை மக்கள் அழிகின்றனர்.

## அதிகாரம் 25 : கண்ணாடி

241. கண்ணாடி தன்னி லொளிபோ லுடம்பதனு
ளுண்ணாடி நின்ற வொளி.

பளிங்கினுள் காணும் வெளிச்சத்தைப் போல் தூல சரீரத்தினுள் கடவுளாகிய ஒளியிருக்கின்றது

242. அஞ்சு புலனின் வழியறிந்தாற் பின்னை
துஞ்சுவதில்லை யுடம்பு.

ஐம்புலன்களின் மார்க்கங்களையும் அறிந்து அடக்கினால் சரீரம் அதன் பின்னர் உறங்காது.

243. நாவி யகத்தே நலனுற நோக்கிடிற்
சாவது மில்லை யுடம்பு.

உந்திக் கமலமாகி மூலாதாரத்தினிலே நன்மை அடைய தவசிருக்கில் சரீரமானது சாவதில்லை.

244. கண்டத் தளவிற் கடிய வொளிகாணி
லண்டத்த தாகு முடம்பு.

கண்டத்தில் பிரகாசமான ஒளியை கண்டால் அவர்களின் சரீரம் தேவ சரீரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245. சந்திர னுள்ளே தழலுற நோக்கினா
லந்தரமு மாகு மவன்.

சந்திர மணடலத்தினில் அக்கினி பொருந்த பார்த்தால் சரீரமானது உயர்பதனைய அடையும்.

246. ஆர்க்குந் தெரியா வுருவந் தனை நோக்கிப்
பார்க்கப் பராபரமே யாம்.

யாரும் எளிதிற் பார்க்கமுடியாத ஈசனை உட்கண்ணால் உள்ளிடத்தில் பார்த்தால் உடம்பினுள்ளும் அவ்வீசனைக் காணலாம்.

247. வண்ணமில் லாத வடிவை யறிந்தபின்
விண்ணவ ராகு முடம்பு.

தனக்கென்று ஒரு நிறமுமில்லாத ஓங்கார உருவத்தை அறிந்த பின் சரீரம் தேவ சரீரமாகும்

248. நெற்றிக்கு நேரே நிறைய வொளிகாணின்
முற்று மழியா துடம்பு.

நெற்றிக்கு நேராக ஓங்காரருபத்தைத் தரிசிப்பவர்களின் சரீரம் அழியாமல் காயகற்பம் பெறும்.

249. மாதூா வெளியின் மனமொன்றை வைத்தபின்
போதக மாகு முடம்பு.

சிறந்த பரிசுத்தமான வெட்ட வெளியாகிய சூனிய நிலையில் மனம் பொருந்திய பிறகு சரீரம் ஞானமயமாகும்.

250. சுத்தமோ டொன்றி மனமு மிறந்தக்கான்
முத்திக்கு மூல மது.

உள்ளம் பரிசுத்தமான ஓங்கார பிரணவத்துடன் பொருந்தி தன் இயல்புகளை துறக்குமானால் அதுவே மோட்சத்துக்கு வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 26 : சிவயோக நிலை

251. ஒளியொன்றி நின்ற பொருளை யுணரி
யழிவின்றி நிற்கு முடம்பு.

ஜோதியில் பொருந்தி நின்ற ஈசனை அறிந்து கொண்டால் உடல் அழியாமல் நிலைத்திருக்கும்.

252. அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி
முடிமிசை யோடி முயல்.

மூலாதாரத்தின் அடியிலெழும் அபானன் என்னும் வாயுவை பல முறை முயன்று மேல் நோக்கி ஆறுதாரங்களிலும் கடந்து கபாலமாகிய உச்சத்தை அடையச்செய்க

253. உண்ணாடி வாயு வதனை யுடனிரப்பி
விண்ணோடு மெள்ள விடு.

உள்நாடியிலுள்ள ஓங்கார வாயுவை சுவாசவாயுவுடன் கலந்து சிரசிற்கு செல்லுமாறு மெல்ல மெல்ல மேலே எழுப்புக.

254. மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பக் குறி.

மெதுவாக வெளிச்சுவாசம் செய்து பின்னர் சரீரம் பெருகும்படி உட்சுவாசம் செய்து அளவுடன் தம்பனம் செய்து அடக்கிவிடுங்கள்.

255. ரேசக முப்பத் திரண்டதே மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.

வெளிச்சுவாசத்திற்கு முப்பத்தியிரண்டு மாத்திரையும் உட்சுவாசத்திற்கு பதினாறு மாத்திரையும் ஆகும்.

256. கும்பக நாலோ டறுபது மாத்திரைத்
தம்பித் திடுவது தான்.

உட்சுவாசத்தை தம்மனஞ் செய்து அடக்குவது அறுபத்தி நான்கு மாத்திரைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257. முன்ன மிரேசி முயலும்பின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

முதலில் வெளிச்சுவாசம் செய்து அதன் பின்னர் உட்சுவாசம் செய்து பின்னர் சுவாசத்தைக் கும்பகம் செய்ய வேண்டும்.

258. ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியுஞ்
சேருமின் வாயுச் செயல்.

பத்துப் பொருட்களாகிய தற்புடம், ஈசானியம், வாமனம், அகோரம், சத்தியோசாதம் என்னும் ஐந்து மூர்த்தங்களையும் ஐந்து புலன்களையும் எழுபத்தியீராயிரம் நாடிகளையும் வாயுவின் இயக்கத்தால் ஒன்று சேர்க்க வேண்டும்.

259. வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை
யீசன்றன் வாயுவி லேற்று.

பத்துப் பொருட்களிலும் கலந்த வாயுவை ஈசனது வாயுவெனும் குண்டலி சக்தியில் சேரும்படி செய்க

260. ஆதி யழல்போ லறிந்தைந் தெழுத்தினைப்
பேதியா தோது பிணை.

யோகத்திற்கு முதன்மையான அக்கினி ரூபத்தைப் போல் ந,ம,சி,வா,ய என்னும் ஐந்து எழுத்துக்களையும் உண்மையாக உணர்ந்து பிறர் அறியாது சுவாசத்துடன் சேர்த்து ஓதுக.

## அதிகாரம் 27 : மெய்யகம்

261. மெய்யகத் துள்ளே விளங்கச் சுடர்காணிற்
கையகத்து ணெல்லிக் கனி.

ஸ்தூல சூக்கும சரீரங்களுக்குள்ளே விளங்குகின்ற சோதிரூபத்தைப் கூர்ந்து பார்த்தால், மோட்சமானது உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

262. கறையற்ற செல்வத்தைக் காணுங் காலில்லாத
வுரையற் றிருப்ப துணர்வு.

குற்றமில்லாத சிவானுபவச் செல்வத்தை அனுபவிக்கும் போது பயனில்லாத வார்த்தையின்றி மௌனமாக இருப்பதே உணர்ச்சியாகும்.

263. உண்டு பசிதீர்ந்தார் போலுமுடி பெல்லா அங்
கண்டுகொள்வ தாகு மது.

உண்டு பசிதீர்த்துக் கொண்டவர்களைப் போன்றிருப்பர் சிவானுபவச் செல்வத்தையெல்லாம் நுகர்ந்து நின்றோர்.

264. உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன்.

உள்ளெழுந்து சப்தம் செய்கின்ற ஓங்கார நாதவோசையை உரைக்கின்றவர்களுக்கு மூப்பும், கிழமும், இறப்பும் கிடையாது.

265. தோன்றாத தூயவொளி தோன்றியக்கா
லுள்ளுற்ற
தோன்றாமற் காப்ப தறிவு.

எளிதில் புலப்படாத பரிசுத்த பிரகாசம் காணப்பட்டால், உன்னை வெளிப்படுத்தாமல் காப்பது அறிவுடைமையாகும்.

266. வாக்கு மனமு மிறந்த பொருள்காணி
லாக்கைக் கழிவில்லை காண்.

வாக்கும் மனமும் கடந்து நிற்கின்ற கடவுளை கண்டால் சரீரத்திற்கு யாதொரு அழிவுமில்லையாம்.

267. கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கா
லுள்ளகத்தே நின்ற வொளி.

சரீரத்திலுள்ள ஞானஒளியை தரிசித்தால் ஞானவீழியில் ஆனந்தத்தை உண்டாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

268. மறவாமற் காணும் வகையுணர் வாரு
மிறவா திருக்கலு மாம்.

மறவாமல் தரிசிக்கும் வகையை அறிந்து கொண்டவர்க்கு மரணமில்லாது சஞ்சீவியாக இருக்கும் முடியும்.

269. ஆனந்த மான தறிந்தபின் னவ்வாசி
யானந்த மாகு மவர்க்கு.

ஆனந்தத்தைத் தரும்படியான திருவருளை உணர்ந்த பிறகு அச்சுவாசமே அவ்வான்மாவிற்கு முடிவான பயனாகும்

270. விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்பத
னுண்ணிறைந்து நின்ற வொளி.

ஆகாயம் முழுவதும் வியாபித்துள்ள பரம்பொருளே சிவன் முத்தி உடலில் நிறைந்திருக்கும் ஒளியாகும்.

## அதிகாரம் 28 : அங்கியிற் பஞ்சு

271. அங்கியிற் பஞ்சுபோ லந்தரத் தேநினைக்கிற்
சங்கிக்க வேண்டாஞ் சிவம்.

நெருப்பினில் பட்ட பஞ்சு அழிவது போல் மனத்தில் சிவ சொருபத்தைத் தவிர ஏனைய உணர்வுகள் அழிந்து வீடும், என்பதில் சந்தேகம் இல்லை.

272. மெய்ப்பா லறியாத மூடர்த நெஞ்சத்தி
னப்பால தாகும் சிவம்.

உண்மை நிலையறியாத மூடர்களின் மனத்திற்கு அப்புறமாக சிவன் சென்று வீடுவான்.

273. நெஞ்சார நீக்கி நினைப்பவர்க் கல்லாஅ
லஞ்சலென னாது சிவம்.

மனம் பொருந்தப் பாவச்செயல்களையும் நினைவுகளையும் நீக்கி ஈசனை சிந்திப்பவர்களைத் தவிர மற்றவர்களிற்கு சிவபிரான் பயப்படாதே என்று அபயமளிக்க மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

274. பற்றிலா தொன்றினைப் பற்றினா வல்லாது
கற்றதனா லென்ன பயன்.

பற்றற்ற இறைவனை பிடித்துக் கொள்ளாவிட்டால் சகல சாஸ்திரங்களையும் கற்றதில் பயன் இல்லை.

275. தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
றம்மை யறிவரோ தான்.

தன்னைத் தான் அறிந்த இறைவனை அறிந்த பிறகு தன்னை அறியும் உணர்வு உண்டாகும்.

276. அசைவை யறிந்துள்ளே யழலெழ நோக்கி
லிசையாது மண்மேற் பிறப்பு.

அசைவு என்பதன் தன்மையை அறிந்து மனத்தினுள்ளே அக்கினி உண்டாவதைப் பார்த்தால் இப் பூமியில் மீண்டும் பிறப்பு உண்டாகாது.

277. இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்த மாம்.

அசைவு இல்லாத பார்வையுடன் ஜோதி ஒளியை அறிபவர்களுக்கு நீங்காத ஆனந்தம் உண்டாகும்.

278. துரியங் கடந்த சுடரொளியைக் கண்டான்
மரணம் பிறப்பில்லை வீடு.

துரிய நிலையையும் கடந்து இருக்கும் சுடர்மயமான பிரகாசத்தைக் கண்டால் இறப்பும் பிறப்பும் இல்லை. மோட்சமே உண்டாகும்.

279. மதிபோ லுடம்பெல்லா மாசற நோக்கில்
விதிபோ யகல விடும்.

சந்திரக்கலை போல் தேகம் முழுவதும் குற்றம் நீங்குமாறு பார்க்கின் ஊழ்வினை வெகு தொலைவிற்கு அகன்று விடும்.

280. சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவ நசிக்கும் பரந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவான்மாவே சிவலிங்கம் என்று தெளிவு அடைந்தவர்களுக்கு, ஜென்மம் என்னும் பாவம் அழிந்து விடும்.

## அதிகாரம் 29 : ஞான நிலை

281. தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்
துற்பன மஞ்சை யுரை.

ஐந்து மூகங்களில் ஒன்றான தற்புருடம் என்னும் சிறந்த முகத்தில் தனிமையில் இருந்து மேலாகிய பஞ்சாட்சரத்தை தியானம் செய்.

282. தற்புருட மேலாகத் தாரகை நிற்பது
முற்பே ரொளியா மது.

தற்புருட முகத்தின் மேல் நட்சத்திர தொகுதி இருப்பது அதுவே அம்முகத்திற்கு பேரொளியாகும்.

283. ஓதிய தற்புருடத் தொவ்வெச் சுழுமுனையிற்
பேதியா தோது பிணை.

உரைத்த தற்புருஷ ரூபத்தில் இருந்து செபிக்கும் போது சுவாசத்தில் ஓங்காரத்தை பேதம் உண்டாகாதவாறு தோத்திரம் செய்ய வேண்டும்.

284. கொழுந்துற வன்னி கொடுவுற வொவ்வி
லெழுந்தா ரகையா மிது.

கொழுந்து விட்டுப் பிரகாசிக்கும் அக்கினிச் சுடரானது ஓங்காரத்தில் செம்மையாக சம்மந்தப்பட்டால் நட்சத்திரப் பிரகாசம் தோன்றும்.

285. மறித்துக் கொளும்வீடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ் சீயைக் கூட்டு.

மோட்ச நிலையைவிட்டு மீண்டும் போகாது தடுக்கும் மூலாக்கினியின் நடுவே யாவற்யையுங் குறிக்கும் ஐந்தெழுத்தைக் கூட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

286. காலுந் தலையு மறிந்து கலந்திடிற்
சாலவும் வேண்டாம் பிறப்பு.

அடியும் முடியும் உணர்ந்து மூலாக்கினியுடன் சேர்ந்து விடின் மறுபிறவி அடைய வேண்டியதில்லை.

287. பொன்னோடு வெள்ளி யிரண்டும் பொருந்திடி
லன்னவன் றாளதுவே யாம்.

நாதம் விந்து இரண்டும் பொருந்தி விட்டால் அந்நிலையே ஈசனது திருப்பாதங்கள் ஆகும்.

288. நின்ற வெழுத்துட னில்லா வெழுத்தினை
யொன்றோசை வைக்கி லொளி.

மனத்துடன் சுவாசத்தை ஒன்ற வைத்தால் பிரகாசமான ஒளி உன்னிடத்தே உண்டாகும்.

289. பேசா வெழுத்துடன் பேசு மெழுத்துறி
னாசான் பரனந்தி யாம்.

சுவாசத்துடன் மனம் பொருந்தினால் பரமனாகிய சிவபிரானே ஞானாசாரியன் ஆவான்.

290. அறியா வுயிரை யருளுடன் வைக்க
வறியாத தொன்றில்லை யாம்.

ஒன்றும் அறியாத ஆன்மாவை அருள் வழியான தியானத்தில் வைத்தால், அவ்வான்மா அறியவேண்டியவை ஒன்றும் எஞ்சியிராது.

## அதிகாரம் 30 : ஏகாந்தம்

291. சகா திருந்ததவ மௌன மதுவேஎ
யேகாந்த மாகி யிரு.

தனிமையில் மௌனநிலையில் தவம் செய்தால் உடலும் உயிரும் அழியாத பலனைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

292. பிறந்திட மாலிடம் பேரா திருப்பி
னிறந்திடம் வன்னி யிடம்.

நாபிக்கமலத்திலேயே சுவாசத்தை நிறுத்தி தேலே செல்லவிடாதிருந்தால் பயனில்லையாம்.

293. வெளியி னடுவில் விளைந்த விளாங்கினிபோ
லொளியி லொளியா யுறம்.

வெளியே ஓட்டினையும் நடுவில் பழத்தினையும் கொண்ட விளாங்கனி போல் ஒளிக்குள் உண்டாகும் பிரகாசமே சிவமாகும்

294. மறவா நினைவா மவுனத் திருக்கிற்
பிறவா ரிறவார் பிறகு.

மறதியும் நினைவும் இல்லாது மௌன தவத்தில் இருந்தால் பின்னர் பிறக்கவும் இறக்கவும் மாட்டார்கள்.

295. குருவாம் பரனந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு.

குருமூர்த்தியாகிய ஈசனுடன் சேருவது குறித்து இரண்டு வேளையும் அவ்யோகத்தை விட்டு நீங்காமல் இரு

296. சுந்தரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம்.

அழகுடையதாகவும் பிரகாசமானதாகவும் விளங்குகின்ற இடமே ஷட்சக்கர மந்திர நிலை (6 ஆதாரத்துச் சக்கரம்) ஆகும்.

297. தூராதி தூரநா செல்லத் தொலையாது
பாராப் பரா பராபரத்தைப் பார்.

வெகு தொலைவில் நாவினால் புகழ்ந்து முடியாததும் கண்ணாலும் பார்க்க முடியாததுமாகிய ஈசனை மனத்தினாலற் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

298. ஏரொளி யீதென் றிறைவ னுறைந்ததே
யீரொளி மீதி னிலை.

சிறந்த ஒளி இதுதானென இறைவன் தங்கியிருந்து நாதவிந்து இயக்கத்து ஒளியின் இருப்பிடமாகிய மனமேயாகும்

299. அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர்

ஆதியும் அந்தமும் இல்லாத ஈசனே அழகிய அறிவை விளக்கும் ஞானச் சுடராகும்.

300. இதுமுத்தி சாதன மிப்படி யென்னூல்
பதிவைத் தனன்குரவைப் பார்.

இதுதான் முத்தி அதையடையும் முறையிது தான் என்று நூலைப் போல் மனத்திற் பதிய வைக்கும் குரவை தேடி அடைக

## அதிகாரம் 31 : மெய்ந்நெறி

301. செல்ல நிகழல் வருங்கால மூன்றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென்ற மூன்று காலங்களையும் மௌன நிலையிலே அறிந்துகொள்ளலாம்.

302. பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர்.

பஞ்சில் பட்ட பொறி எப்படி பரவுமோ அவ்வாறே ஞானச்சுடரானது தேகம் முழுதும் பரவியிருந்து தீய குணங்களை எரிக்கும்.

303. இமைப்பினிற் பந்தங் கெடுக்கு மின்போல்
நமக்குச் சிவன்செய லால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைக்கும் நேரத்தில் தோன்றி மறையும் மின்னலைப் போல் சிவன் செயலால் நமக்குள்ளிருக்கும் பந்தங்கள் அழிந்துவிடும்.

304. குவித்து மனத்தைக் குறித்துள்ளே நோக்கிற்
சேவித்துப் பெறுவ தெவன்.

ஆன்மாவை அடக்கி சக்தியை எழும் விதத்தை கருதிப் பார்த்தால் அதாவது மனது செம்மைப்பட்டால் மந்திரஞ் செபித்தால் வேண்டாம்.

305. காலுந் தலையு மொன்றாய்க் கலந்திடி
னாலா நிலையென நாடு.

மூலாதாரமும் உச்சிநிலையாகிய கபாலமும் ஒன்றுபட்டுக் கலந்துவிட்டால் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற நான்கினுள் நாலாம் நிலையாகிய சாயுச்சிய பதவி என்பதை அறிக.

306. மூல நிலமிசை மூன்றா நிலத்தினி
லால மருந்துஞ் சிவம்.

சிவன் அருந்திய விஷத்தைப் போல் மூலாதாரத்தின் மூன்றாம் நிலையாகிய சாரூபபதவியிலிருந்து காமம் முதலிய தீய குணங்களை அழித்து அமுதம் பெறலாம்.

307. எழிலுறு முச்சியின் மேன்மனம் வைக்கிற்
றொழிலொன் றிலாத சுடர்.

அழகு தரும் உச்சியின் மேல் கருத்தினை ஒடுக்கினால் அசையாத ஞானச்சுடர் தோன்றும்.

308. அடைத்திட்ட வாசலின் மேன்மனம் வைத்துப்
படைத்தவன் றன்னையே பார்.

மூடியிருக்கும் வாசலின் மேல் மனத்தினை பொருத்தி உலகைப்படைத்த பரமனையே பார்ப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

309. அறுபத்தொ டாறு வருட மிதானு
முறதியீ தாக வுணர்.

பதினாறு கலைகளின் வழியாக ஒரு வருட காலத்திலேயே பரமனை உறுதியாக அடையலாம்.

310. முத்துநகை யெளவைசொன்
முந்நூற்றுப்பத்துமுன்
சித்தத்தில் வைத்துத் தெளி.

முத்துப் போன்ற சிரிப்புடைய ஔவையார் அருளிய முந்நூற்றுப்பத்துக் குறள்களையும் உள்ளத்தில் நிறுத்தி அனுபவத்தால் அறிந்து கொள்க.

## ஔவைகுறள் மூலமும்
## உரையும்
## முற்றுப்பெற்றன.

மூலம் : 'ஔவையார் அருளிச்செய்த திருக்குறள் மூலமும் உரையும்'
- திரு. D.தீனதயாளு, B.A.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் பயப்படும் குழந்தையை விட வெளிச்சத்தில் பயப்படும் மனிதன் மோசமானவன்.

- எமர்சன்

அமைதியாக இருந்தால் எவரையும் வசப்படுத்திவிட முடியும்.

- செயின்ட் ஜஸ்ட்

உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான். தன்னை அறிந்த வன் அகம் பாவமடையமாட்டான்

- விம்மன்ஸ்

பெரிய நெருக்கடிகளுக்கிடையே தான் இறைவன் வெற்றி பெறுவதற்கான வழியையம் வகுத்திருக்கிறான்.

- ஹோம்ஸ்

சுருக்கெழுத்தும் கைரேகையும் அவற்றைப் படித்தவனுக்குத் தான் தெரியும் மற்றவனுக்கு அவைகள் வெறும் கோடாகத்தான் தெரியும். அதுபோல் கோயிலில் இருக்கும் கடவுளின் திருவுருவம் பக்தி உடையவனுக்குத்தான் தெய்வமாகத் தெரியும். மற்றவருக்கு கல்லாகத் தெரியும்.

- வாரியார்

வலிமை உடல் பலத்தால் அல்ல, மன உறுதியில் இருந்து உருவானது.

-மகாத்மா காந்தி

பகைமையால் எப்போதும் அழிவுதான். அன்பு ஒருபோதும் மடிவதில்லை

- மகாத்மா காந்தி

நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை

- கார்லைல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.

- நியேட்சே

உங்கள் தோல்விகளை நினைத்துப் பார்த்து ஏன் தோற்றோம் என்று ஆராய்ந்து தோல்வியின் காரணத்தை தவிர்த்து வெற்றியடையுங்கள் என்கிறார்கள். அதற்குப் பதிலாக உங்கள் வெற்றிகளை ஆராயுங்கள் அவற்றுக்குக் காரணமாக இருந்த பண்புகளையும் பின்பற்றுங்கள். தொடர்ந்து வெற்றியடைவீர்கள்.

- ஹல்டேன்

செயலை விதையுங்கள், பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள், குணம் உருவாகும். குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உருவாகும்.

- போர்டுமேன்

கல்வியின் இலட்சியம் கடவுளை அடையும் வழியை அறிவிப்பதும் கடவுளை அடைவதும் தான்.

- ஸ்ரீ ராமகிரு'ஷ்ணர்

ஏழைகள் எப்போதும் எமக்கு ஏராளமான அன்பை வாரி வழங்குவார்கள். ஆண்டவனின் பிரியர்களான ஏழைகளிடம் ஆண்டவன் நமக்கு அளித்த வரப்பிரசாதமான அன்பைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்காக இறைவனுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

- அன்னை தெரசா

உழைப்பின் வேர்கள் கசப்பானவை. ஆனால் அதனுடைய கனிகள் இனிப்பானவை.

- ராக் பெல்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் அன்பு செலுத்துவாள் அல்லது வெறுப்பாள் நடுத்தரமாக அவளுக்கு இருக்கத் தெரியாது.

- சைப்பிரஸ்

நீ குறைவாகப் பேசப்பேச உன் பேச்சைக் கேட்பவர்களின் கூட்டம் அதிகரிக்கும்

- வான்ப்ரௌன்

குடும்பத்தில் பெண்களுக்கு உரிய இடம் கொடுக்காத வரையில் எந்த நாடும் முன்னேற முடியாது.

- இந்திரா காந்தி

உணர்ச்சிகளைக் கட்டப்படுத்த முடியாத மனிதன் தன் திறமைகளை வெற்றியாக்க முடியாது.

- டிரெம்மண்ட்

புகழ்ச்சியை விடக் கண்டனம் ஆபத்து இல்லாதது.

-எமர்சன்

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்கு உரிய நண்பன் கிடைப்பது அரிது.

- ஒரு மகான்

பெற்றோர்களுக்குப் போடும் சோறும், தங்கைகளுக்குக் கொடுக்கும் சீரும் கடமையாகும்.

வீரம் உடலின் தன்மையல்ல, அது ஆன்மாவின் தன்மை

- மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுணர்தல்



எமது குடும்பத் தலைவரது மறைவு கேட்டதுமே ஓடிவந்து பேராதரவாயிருந்தவர்கள், அடுத்த நாள் கிரியைக்கு வேண்டிய சகலவிதமான ஒழுங்குகளையும் அங்கிங்கென்று சென்று செய்தவர்கள், தூர இடங்களுக்கு சென்று இழப்பறிவித்தவர்கள், இறுதிக் கிரியையில் கலந்து இன்னோரன்ன உதவிகள் புரிந்தவர்கள், துயர்பகிர்ந்தவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள், மயானம் வரைவந்து அஞ்சலி செலுத்தியவர்கள், தொலை பேசிமூலம், அனுதாப செய்திமூலம் துயர் பகிர்ந்தவர்கள், அஞ்சலியுரை ஆற்றியவர்கள். தாகசாந்தி செய்தவர்கள், போசனம் தந்தவர்கள், அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிருத்தியம் ஆகியவற்றிற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்தவர்கள், வேறு ஆதரவு தந்தவர்கள் என, எல்லா நல்லுள்ளங்களுக்கும் நன்றிகூறக் கடமையுடைத்தோம்.

இம்மலர் சிறப்புற செய்திகள், கட்டுரைகள் தந்தவர்கள், ஔவைக் குறள் மற்றும் பொழிப்பு தட்டச்சுச்செய்த அன்பர்கள், அதன் பொழிப்பை சரிபார்த்துத் தந்த திரு க.சிவராமலிங்கம் அவர்கள், புத்தகம் தந்த "புத்தொளி" திரு ந.சிவபாதம் அவர்கள் எனப் பேருதவி புரிந்த அனைவருக்கும் நன்றிகூறுகிறோம்.

இவர்மேல் கொண்ட அன்பினால் அந்தியேட்டி அழைப்பிதழை தமது செலவிலேயே அச்சிட்டுத் தந்த மஹாத்மா அச்சக உரிமையாளர் திரு.தெய்வேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

குறுங்கால அவகாசத்தில் இம்மலரை அழகாக அச்சிட்டு நேரத்துக்குத் தந்துதவிய "ஹரிஹரணன்" அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

'காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.'

31ம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## A

- நவரட்ணராஜா + யோகேஸ்வரி
  - கோகிலவதனி
  - தர்சிகாயினி
  - வித்தியாதரன்
- சண்முகராஜா + தபேந்திராதேவி
- ஜெயரட்ணராஜா + சிவக்கொழுந்து
- நவயோகராஜா + சாந்தநாயகி
  - நக்கீரன்


## B


- முத்துவேல்ராஜு + புஷ்பா
  - கஜேந்திரன்
  - சுகன்யா
- சிவலிங்கராஜு + சந்திரா
  - மயோரா + சுதர்சன்
  - டறன்
- செல்வலிங்கராஜா + புவனா
  - இந்திரஜித்
  - இந்திரயாகுலன்
  - இந்திரா
  - சிந்துஜா
- புஸ்பலிங்கராஜா + உத்தமதேவி
  - தினேஷ்குமார்
  - சறஞ்யன்
- முத்துராணி + சிவலோகந்தன்
  - துர்க்கா
  - யாழினி
  - நிசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் (தனியார்) நிறுவனம்,
424, காங்கேசன்துறை சாலை , யாழ்ப்பாணம்.
தொ.இல - 021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org